# பக்தி விஜயம்..



ஐப்பசி - கார்த்திகை : 2012
ரதம் : 01
வழி : 06

இல்லங்களில் படிக்கவேண்டிய பக்தி மலர்

தீபாவளி சிறப்பு மலர்



வரம் தரும் தீபாவளி..

ஐப்பசியை அறியுங்கள்..

கௌரியின் கோபம் விரதமானது!

நரகாசுரனின் தந்திரம்..

கார்த்திகை தீபநாளில் முற்றத்தில் பஞ்சமூர்த்திகள்!

கண்ணகியின் சமயோசிதம்

சாதத்தில் சிவலிங்கம்!

போதி சத்வர் காப்பாற்றினார்..

நம்நாட்டு சஞ்சிகை!

உள்ளே ...
வாசிப்பு இன்பமும்,
ஆன்மீகமும் !



மன்னார் மாவட்ட விவேகானந்தர் விழா சிறப்பிதழ் இணைப்பு....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்ந்து வரும் இதழ்களில் ...




அதிபத்த நாயனார் இவர்!
பரதவ குலத்தின் தலைவர்.
நாள்தோறும் முதலில் பிடிபடும் மீனை
கடலுக்கே சிவார்ப்பணம் செய்து
விடுவது வழக்கம் "இது நட்டமாடிய
நம்பார்க்கு.." என்று சிவபெருமானை
துதித்துப்பாடி மகிழ்ந்தும் களிப்பார்.
இறைவனும் அவரை சோதிக்கவே,
ஒரேஒரு மீனே தினமும் பிடிபட்டது.
அதை அவரும் கடலில் விடவே,
வறுமையால் குடும்பத்தோடு
துன்புற்றார்.

பசியால் தவித்தாலும் தலைமீன் பெருமானுக்குத் தரும் சீலத்தில் தவறாதிருந்தார். ஒருநாள் பொன்னும் மணியும் பதித்த தங்க மீனொன்று முதலில் வலையில் கிடைத்தது. வலைஞர்கள் அனைவரும் தமது வறுமை நீங்கிய மகிழ்ச்சியில் திளைத்தனர். ஆனால் அதிபத்தரோ "இப் பொன்மீன் என்னை ஆளுடைய நாயகனின் பொற்கழல் சேர்க ..'' என்றவாறு அதனையும் அலைமீது விட்டார். வாடிய முகத்தோடு பார்த்த வலைஞர்கள் திடீரென ஒரு அதிசயம் கண்டார்கள்! ..

## மோகினியே ஆவுடை, ஈசனே பாணலிங்கம்!

தாருகாவனத்தில் முனிவர்களின் ஆசிரமங்களிலே சதிபதி ஒற்றுமைக்கு பங்கம் வந்தது..



வேதாந்த விழுமிய உயர்வுகள் கணவன் மனைவியரிடயே ஆணவத்தை ஏற்படுத்தி இருந்தது. அவர்களின் செருக்கை அடக்க மோகினி ஆவுடை யாகவும், இறைவன் பாண லிங்கமாகவும் மாறி கைலாசநாதராக உருக்கொண்டனர். பூரண லிங்க தரிசனம் பெறுமிடத்தில் அம்மையும், ஐயனுடன் அருள்புரிகிறாள்!


மாதாந்தம் ' பக்தி விஜயம்.. ' உங்களின்
வீடுதேடி வரவேண்டுமா?
சந்தாதாரர் ஆகுங்கள்!
0713861168,0774335144,
0776649635,0232250071
இலக்கங்களில் தொடர்பு கொண்டு பதிவு செய்யுங்கள்
எஸ்.பி.முத்து கணக்கு இல. 941641, இலங்கை வங்கியில்
சந்தாவை செலுத்தலாம். காசோலைகள்,மணி
ஓடர்களும் ஏற்கப்படும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்நாளும் இன்புற்றிருக்க....





"தாயிற் சிறந்த கோயில் இல்லை"



# பக்தி விஜயம்..

100/=




இந்து சமூகத்தின் ஆன்மீக எழுத்துப் பணியில் ..

இதழ் உருவாக்கம்,
கணனி வடிவமைப்பு,
நிர்வாக இயக்கம் :
எஸ். பி. முத்து
(பிரதம ஆசிரியர்)

அனுசரணை :
வை. திருச்செல்வம்

இந்த பக்திச் சஞ்சிகை
வெளிவரும் முகவரி :
555, புதுத்தெரு,
மன்னார்,
இலங்கை.

தொலைபேசி :
071- 3861168
077- 4335144
023- 2250071

சைவ அடியார்களுக்காக பல நூல்கள், சுவடிகள், சஞ்சிகைகள், இணையத் தளங்களிலிருந்து மூல விஷயங்கள் பெற்று, இலகு தமிழில் தரப்படுகின்றன. அவை என்றும் நன்றிக்குரியன.

பெரியோர்களும், சான்றோர் -களும் குறை, நிறைகளை எடுத்தியம்புவதோடு, வாசகர்களும் சமயச் செய்திகள், ஆக்கங்கள், விமர்சனங்களை தந்து ஆதரிக்க வேண்டுகிறோம் ..

## எல்லையில்லா இன்பமெது?



சிவச்செல்வார்களுக்கு வணக்கம்.

நம் சமயத்தின் ஒவ்வொரு நாட்களும் நிமிடங்களும் இன்பமயமானதென்ற சேதி வேதங்களில் உண்டு. அதனை நினைவு படுத்துவதும் அழைப்பு விடுவதும் ஒரு இறைபணியே! அந்த பெரும் பணியில் ஒரு சிறு துளியாக இந்த சஞ்சிகையை தந்துகொண்டிருக்கிறோம். இதனை வாசிப்பதன் வாயிலாக நீங்களும் எங்கள் சேவைக்கு அங்கீகாரம் தந்துகொண்டிருக்கிறீர்கள். இதற்காக எமது அளப்பரிய நன்றிகளை ஏற்றுக்கொள்ளவும்.

"வாசிப்பு ஆர்வம் இல்லாமல் போகிறது.."
"சமய நாட்டம் இளைஞர்ளிடம் குறைவு.." என்றெல்லாம் முன்கூட்டியே பின்னோக்கு வார்த்தைகளை உதிர்த்துவிடுகிறார்கள். இதனால் இந்த இரண்டு பெருமதியான விஷயங்களும் சுலபமாக நம்மிடமிருந்து விடைபெற முயற்சிக்கின்றன. ஆனால் கொஞ்சம் கவனமெடுத்தால் இவற்றின் அருமையை இலகுவாக புரியவைத்துவிடலாம். அது மட்டுமல்ல நம்சமூகத்தின் எல்லையில்லா வாசிப்பு ஆர்வத்திலும் ஆன்மீக இன்பத்திலும் மிதக்கச் செய்யலாம்.

அப்படியான முயற்சியாகவே இந்த சஞ்சினையை தர ஆரம்பித்தோம். அந்த முயற்சி பெருமளவில் பயன்பெறும் திசையல் இப்பொது பயணித்துக்கொண்டிருக்கிறது. நாளாந்தம் இணைந்து வருகின்ற வாசகர்களும் அவர்களின் ஊக்கமளிப்புகளும் இதற்கு சான்றாக விளங்குகின்றன. இந்த ஆதரவையும் நேசத்தையும் வேண்டி எப்போதும் பக்தி விஜயம். தங்கள் கரங்களை வந்தடையும்..

அன்புடன், ஆசிரியர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடக்காரனும், ஓடக்காரரும்!

காவியத்துளிகள் ..



ராமரும், சீதையும், லட்சுமணனும் வனவாசத்தின் போது ஒரு ஆற்றங்கரையை அடைந்தனர். மறு கரையை அடையும் பொருட்டு ஓடத்திற்காக காத்திருந்தனர். அப்போது இவர்களைக் கண்டுவிட்டு ஒரு ஓடக்காரன் பயபக்தியோடு ஓடிவந்து தனது ஓடத்தில் ஏறும்படி வேண்டினான்.

ராமரும் ஏறுவதற்கு தனது காலைத் தூக்கவே ''ஐயனே, சற்றுப் பொறுங்கள். அவசரப்பட்டு எனது ஓடத்தில் கால் வைத்துவிடாதீர்கள்! '' என்று தடுத்தான்.

ராமரும் திடுக்கிட்டு, ''ஏனப்பா தடுக்கிறாய்? '' என்றார். ஓடக்காரனோ பதில் கூறாமல் ஆற்றிலிருந்து நீரை அள்ளி ராமரின் கால்களைக் கழுவிவிட்டு ''பிரபு, இப்போது ஏறுங்கள் என்றான்.

ஓடத்தில் ஏறி அமர்ந்துகொண்ட ராமபிரான் ஓடக்காரனை வியப்புடன் பார்த்தார். 'உன் செயலுக்கு என்ன விளக்கம்? ' என்பதுபோல் அவரின் பார்வை இருந்ததால் வணங்கியபடி அவன் பதில் சொன்னான். '' பெருமானே, தங்களின் பாதம் பட்டு கல் பெண்ணானதே! என் ஓடமும் அப்படியாகி விட்டால் நான் எப்படி பிழைப்பது? '' என்றான். அதைக்கேட்டு மற்றவர்கள் அவனது அப்பாவித்தனத்தை எண்ணி சிரித்துக்கொண்டார்கள். ஆனால் ராமபிரான் மட்டும் அவனுள் இருந்த அறிவை அறிந்தார்.

ஓடம் மறு கரையை அடைந்ததும். ஓடக்காரனுக்கு ராமர் கூலி தரும்போது '' இது எதற்கு! ஓடக்காரருக்கு இன்னொரு ஓடக்காரர் கூலி தருவார்களா? '' என்று அவன் கேட்கவே, மீண்டும் மற்றவர்கள் நகைத்தார்கள்.

ஆனால் ராமரோ அவனை நோக்கி '' நானும் ஓடக்காரனா! எப்படி? '' என்று அன்போடு கேட்டார். அவனும் கைகூப்பியவாறு, '' ஆமாம் சுவாமி! பிறவிக்கடலைக் கடக்க உதவும் தாங்களும் ஒரு ஓடக்காரர்தானே! '' என்றான். இந்த பதிலால் திகைத்தவர்களை பார்த்து புன்னகைத்தார் ராமர்.

---

## தெரிந்து கொள்வோம்..

# துளசியின் மகிமை!




**துளசி பூஜையில் கிடைக்கும் அருள் மகத்தானது. சுமங்கலிகளின் எண்ணங்களை ஈடேற்றித தரும் சக்தி துளசி பூஜைக்கு உண்டு.**

துளசி மாடம் வீட்டில் வைத்து, துளசியை பூஜிப்பது விஷேசமாகும். செவ்வாய், வெள்ளியில் விஷேசமாக பூஜிக்கலாம். துளசி இலையை நகங்களால் கிள்ளக்கூடாது. அமாவாசை, பௌர்ணமி, துவாதசி,ஞாயிற்றுக்கிழமை, கிரகண காலம், மற்றும் மாலைப்பொழுது, இரவுப்பொழுது ஆகிய காலங்களில் துளசி இலையைப் பறித்தல் கூடாது. சுமங்கலிப் பெண்கள் வெள்ளிக்கிழமைகளில் துளசியைப் பறிப்பதைத் தவிர்க்கவேண்டும். துளசிச்செடி துஷ்ட சக்திகளை வீட்டினுள் அனுமதிக்காது. துளசியைப் பூஜிப்பவர்வீட்டில் மகாலட்சுமி நித்திய வாசம் புரிகிறாள்! ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தலங்கள் அறிவோம் ..

# கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கோவில்



ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் மூலஸ்தானத்தில் உறைந்து அருள்பாலிக்க, தலத்து நாயகியாக சிவகாமி அம்மை அம்பாள் சந்நிதானத்தில் வீற்றிருக்கிறாள்.

முற்றிலும் கற்கோயிலாகிய இத்தலத்தில் நடராஜர், விநாயகர், சோமாஸ்கந்தர், மகாவிஷ்ணு, பஞ்சலிங்கம், முருகப்பெருமான், பைரவர், சுவர்ண பைரவர், நவக்கிரகம் என்போர்க்குத் தனித்தனியாக ஆலயங்கள் அமைந்திருக்கின்றன. கோட்டத்தில் தட்சிணாமூர்த்தி, நர்த்தன கணபதி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை ஆகியோர் உளர். சனீஸ்வரன் தனியாக தலம்கொண்டிருக்கிறார்.



பீமனின்

## "கிருஷ்ணார்ப்பணம்!!

காவியத்துளிகள்..

ஒருநாள் பாண்டவர்களோடு கிருஷ்ண பரமாத்மா உரையாடிக்கொண்டிருந்தார். அப்போது அர்ஜுனன் அவரிடம் ஒரு கேள்வி கேட்டான்.

"கண்ணா, எங்களில் தங்களுக்கு பிடித்தவர் யார்? "

சற்றே சிரித்துவிட்டு பகவான் சொன்ன பதிலால் அனைவருமே ஆச்சரியப்பட்டனர். அந்த பதில் இதுதான் ..



"பீமன்தான் எனக்கு பிடித்தமானவன் .."
அர்ஜுனன் அடக்க முடியாமல் கேட்டான்,

"என்ன மாதவா இது! பீமண்ணாவை விட மற்றையோர்தானே தங்களுடன் அதிக நெருக்கத்தைக் கொண்டிருக்கிறோம். தினமும் தங்களுக்குப் பூஜை செய்கிறவர் தருமர். பாஞ்சாலியும் உங்கள் பெயரைத்தான் சதா சர்வகாலமும் சொல்லிக்கொண்டிருப்பாள். நகுலனும், சகாதேவனும் தங்களின் நிரந்தர சேவகர்களாக இருப்பவர்கள். நானோ எப்போதும் தங்களையே சுற்றிக்கொண்டிருப்பவன். இப்படியிருக்க, தினமும் சமையல்கட்டு, சாப்பாடு என்று திரியும் பீமன்னையா நேசிக்கிறீர்கள் ? .."



எல்லோரும் வியப்போடு கிருஷ்ணரைப் பார்க்க, அவரும் அமைதியாக பதில் சொன்னார், "அர்ஜுனா, நீ சொன்னவாறே சாப்பாட்டு விஷயத்தில்தான் பீமன் என்னைக் கவர்ந்துள்ளான் .. .. உன் தேவைக்கேற்ப மட்டுமே என்னை கேட்பவன் நீ. ஆபத்து நேரங்களில் மட்டுமே அழைப்பவள் பாஞ்சாலி. தர்மர் செய்யும் பூஜையும் அவரது நித்திய கருமமே. ஆனால் என் அருகே வராவிட்டாலும், எதைச் சாப்பிடும்போதும் 'கிருஷ்ணார்ப்பணம்' என்று சொல்லிவிட்டே சாப்பிடுபவன் பீமன். இப்போது புரிந்ததா? " என்றார் பரமாத்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீபாவளி ஸ்பெஷல்!!**

# தீபாவளி விடியலில் தீமைகள் அகலட்டும் ..

நரகாசுரனால் தேவர்களும், முனிவர்களும் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல.

யாகங்கள் நடத்த முடியாமல் தவசிரேஷ்டர்களும், நல்லாட்சி நடத்தமுடியாமல் தேவர்களும் திண்டாட வேண்டியிருந்தது. மாறாக, தங்களின் உயிரைக் காத்துக்கொள்வதே கேள்விக்குறியாகியது அவர்களுக்கு.

தேவேந்திரனிடம் சென்று முறையிட்டால் அவனின் கதையோ அதிக சோகமாக இருந்தது. எந்த நேரத்திலும் தேவலோகத்தின்மீது நரகாசுரன் படையெடுப்பான் என்ற அச்சத்தில் அவன் நடுங்கிக்கொண்டிருந்தான். தனது லோகத்தையே காப்பாற்ற முடியாத நிலையில் பூவுலகத்தை காப்பாற்றுவதாவது?

நரகனின் வதைகள் உச்ச நிலையை அடையவே, இதற்கு தீர்வு காணக்கூடியவர் காக்கும் கடவுளான நாராயணனே என்பதால், எல்லோரும் வைகுண்டத்தை நாடினார்கள்.

**சத்தியபாமாவின் வீரம்**



**அது, மனைவியருக்கான தைரியம்**



## கங்கா ஸ்நானமும், மகிழ்ச்சியும் மக்களுக்கு ..

## பரமாத்மாவின் கையால் முக்தியோ தனக்கு ..

**-- நரகாசுரனின் தந்திரம்!**

நாராயணனோ அப்போது கிருஸ்ணாவதாரம் எடுத்திருந்தார். தேவேந்திரன் தலைமையில் எல்லோரும் சென்றபோது, கிருஷ்ணர் துவாரகாபுரியை நிர்மாணம் செய்துகொண்டு, அங்கேயே சிறிதுகாலம் விச்ராந்தியாய் இருந்தார். அப்போதுதான் ருக்மிணியையும் மணமுடித்திருந்தார். தொடர்ந்து, சத்தியபாமாவையும் மணம்புரிந்த நிலையில் கிரஹஸ்தனாக இருந்தார். இடையிடையே லோக நன்மையை கருதி அசுரர்களை வதம்செய்து வந்தார்.

இந்நேரத்தில்தான் இந்திராதியோர் பகவானை வைகுண்டத்தில் சென்று சந்தித்தார்கள். ஒவ்வொருவரும் நரகாசுரனால் படும் துன்பங்களை சொல்லி ஓய்ந்தார்கள்.

மேலுமொரு அசுரனை ஒழிக்கும் வேலையை பகவான் ஏற்றார். இம்முறை அழிக்கும் அசுரனின் வாயிலாக ஒரு நீதியையும் உலகத்திற்குச் சொல்லவேண்டும் எனவும் திருவுளம் கொண்டார்.

கருட வாகனத்தில் ஏறிக்கொண்டு போருக்குப் புறப்பட்ட கிருஸ்ணரோடு சத்தியபாமாவும் ஏறிக்கொண்டாள். இதுவும் பகவானின் சித்தமே. ஏனெனில், சத்தியபாமா உடன் வருவதன் மூலம் ஒரு தாயின் மனநிலையை உலகம் அறியப்போகிறது. பெற்ற பிள்ளையை தண்டிக்கவேண்டுமானால் தந்தை மட்டுமல்ல, தாயும் தயாராக இருக்கவேண்டும் என்பதை கண்ணன் உணர்த்த விரும்பினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன! கிருஷ்ணரும், சத்தியபாமாவும் நரகாசுரனின் பெற்றோர்களா? ..

ஆமாம்! எப்படியென்றால், பாற்கடலை தேவ, அசுரர்கள் கடைந்தபோது மத்தாக மந்தார மலை பயன்பட்டது அல்லவா? அந்த மலையை ஆதாரமாக தாங்கிக் கொள்வதற்காக கூர்ம அவதாரம் எடுத்து பகவான் கடலின் அடியில் சென்றார். அப் பணியை அவர்செய்துகொண்டிருந்த காலத்தில் பூமாதேவியானவளுடன் காதல் ஏற்பட்டது. அவர்களுக்கு பிறந்தவனே நரகாசுரன் என்று புராணம் சொல்கிறது. அதுபோல பூமாதேவியே சத்தியபாமாவின் உருவெடுத்து கிருஷ்ணரை மணந்திருப்பதால் இருவருமே நரகாசுரனுக்கு பெற்றோர்கள் ஆகிறார்கள்.

லோகத்தின் விரோதியாக தமது மகன் இருப்பதால் அவனைத் தண்டிக்க வேண்டியது தர்மமே என்பதை பெற்றோர்கள் உணரவேண்டும். அந்த மனவுறுதி தந்தைக்கு மட்டுமல்ல, தாயிடமும் இருக்கவேண்டும் என்பதை கிருஷ்ணர் உணர்த்த விரும்பினார்.

**தீபாவளியன்று நாம் நீராடும் ஜலத்தில் கங்காதேவி வந்தமர்கிறாள்! ஆதலால், அன்று நம் குளியல் புண்ணியம் நிறைந்துள்ளதை கவனத்தில் கொண்டு நீராட வேண்டும் .**



தவிர, பொறுமைக்கு உதாரணமான பூமாதேவியே துஷ்டர்களின் அஜாரகத்தினால் பொறுமையிழந்து ஒரு முடிவுக்கு வந்தாள்.

ஒருநாள் பசு வடிவமெடுத்து மகாவிஷ்ணுவிடம் சென்று தனது நிலையைக் கூறிப் பிரார்த்தித்தாள். இதனால் மனமிறங்கிய பகவான் தீயவர்களை அழித்து பூமிப்பாரத்தை குறைப்பதற்காக கிருஷ்ணராக அவதரித்தார்.

அவ்வாறே அவர் கம்சன், சிசுபாலன், ஜராசந்தன், துரியோதனன் முதலானவர்களை ஒழித்து வந்தார். இவர்களின் வரிசையிலே நரகாசுரன் மோசமான அரக்கனாக இருந்ததாலும், தமது மைந்தனாகவும் இருப்பதாலும் தம்பதியாக சென்று அழிப்பதே முறையென்று புறப்பட்டனர்.

அநேக கோட்டைகளை அமைத்து, அதனுள்ளே இருந்தான் நரகன். சுற்றிலும் தண்ணீர் பிரவாகமாக அரண்கள். எல்லைகளாக சுற்றிலும் மலைகளாலான சுவர்கள். கூடவே அக்கினிக்கோட்டை, வாயுக்கோட்டை என்று பல அரண்கள்!

கிருஷ்ணரும் ஒவ்வொரு கோட்டையாக நிர்மூலமாக்கிவிட்டு நேராக அசுரனின் நகருக்குள் நுழைந்தார். தனது பாஞ்சஜன்யத்தை எடுத்து ஊதி அவனை போருக்கழைத்தார்.

பெரும் யானை மீதமர்ந்து ஆவேசத்துடன் வெளியே வந்தான் நரகாசுரன். பெரும் பலத்தோடு போரிட்ட அவனுடன் கருடன்மீது அமர்ந்து சமர் புரிந்தார் கிருஷ்ணர். அவனுடைய பெரும் அசுரப்படையை எதிர்கொள்வதில் கருடனும், சத்தியபாமாவும் அவருக்கு உதவியாக இருந்தார்கள்.

முழுச் சேனைகளையும் அழிக்கும் ஆற்றல் தன்னிடம் இருப்பதை அறிந்தும் இந்த யுத்தத்தில் தனது மனைவிக்கு பயிற்சியளிக்க பகவான் விரும்பினார். சத்தியபாமாவின் போர்த்திறன் கிருஷ்ணருக்கு மகிழ்ச்சியை கொடுத்தது. ஆபத்துக்காலத்தில் கணவனுக்கு உதவும் தைரியத்தை மனைவியானவள் பெற்றிருக்க வேண்டும் என உணர்த்த விரும்பிய அவரின் விருப்பம் நிறைவேறியது. நரகாசுரனை வீழ்த்துவதில் சத்தியபாமாவின் பங்களிப்பு இன்றும் குறிப்பிடப்படுகின்ற ஒன்று.

அசுர சைன்யம் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து நரகாசுரனுக்கும், பகவானுக்கும் நேரடி மோதல் நிகழ்ந்தது. முதல்நாள் தொடங்கிய யுத்தம் இரவையும் தொட்டு, விடியும்வரை நடந்தது. இருள் நீங்கிய அருணோதய காலத்தில் தனது சக்ராயுதத்தால் நரகாசுரனை சங்கரித்தார் கிருஷ்ணர்.

பொழுதும் விடிய, இந்த செய்தியால் உலகமே மகிழ்ந்து துள்ளிக்குதித்தது. சாகும் தருவாயில் தனது மரணநாளை சகலரும் மங்கள ஸ்நானம் செய்து கொண்டாடி மகிழவேண்டும் என்று வரம் கேட்டான் அசுரன். பகவானும் அவ்வாறே வரம் தந்தார். தனது கையால் மரணமடைந்து முக்திபெற அவன் காத்திருந்த தந்திரம் தெரியாதா அவருக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீர இளைஞருக்கு ..

சுவாமி விவேகானந்தரின் 150 வது ஜனன ஆண்டு! நாடு முழுவதும்!! ..

### வீரனாக எழுந்து நில்!

நீ எதை நினைக்கிறாயோ, அதுவாகவே ஆகிவிடுகிறாய். நீ உன்னை பலவீனன் என்று நினைத்தால், பலவீனனாகவே ஆகிவிடு கிறாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாக ஆகிவிடுவாய்!

இந்த உலகம் மிகப்பெரிய ஓர் உடற்பயிற்சிக்கூடம். இங்கு நாம் நம்மை வலிமையுடையவர்களாக்கிக் கொள்ள வந்திருக்கிறோம்.

உனக்குள் அளவற்ற ஆற்றலும், அறிவும், வெல்லமுடியாத சக்தியும் குடிகொண்டிருக்கின்றன என்று நினைப்பாயானால், அந்த சக்திகளை உன்னால் வெளியே கொண்டுவர முடியுமானால், நீயே அற்புதமானவன்

பலவீனத்திற்கான பரிகாரம் வலிமையைக் குறித்துச் சிந்திப்பதுதான். அது ஏற்கனவே எல்லோருக்குள்ளும் இருக்கிறது. அதை போதிப்பாயாக.

குழந்தாய்! நான் வேண்டுவதென்னதெரியுமா? பயம் என்பதையே அறியாத இரும்பிலானால உள்ளமும், இதயமுமே

ஓ சிங்கங்களே! எழுந்து வாருங்கள். நீங்கள் செம்மறியாடுகள் என்ற மயக்கத்தை உதறித் தள்ளுங்கள். நீங்கள் அமரத்துவம் பெற்ற ஆன்மாக்கள், சுதந்திர ஆன்மாக்கள், அழியாத திருவருளைப் பெற்றவர்கள்.

சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும்.. சுறுசுறுப்பு என்பதற்கு எதிர்ப்பது என்று பொருள். எல்லாத் தீமைகளையும் எதிர்த்துப் போரிடு. எண்ணத்தில் ஏற்படும் தீமைகள், செயலில் ஏற்படும் தீமைகள் முதலிய எல்லாத் தீமைகளோடும் போரிட்டுக்கொண்டே இரு. இப்படி எதிர்ப்பதிலே நீ வெற்றி பெற்ற பிறகுதான் அமைதி உன்னைத் தேடிவரும்.





நீயே உன்னை பலவீனன் என்று நினைத்துக்கொள்வது பெரிய பாவம். உன்னைவிட உயர்ந்தவர் யாருமில்லை தெரியுமா? அந்த பிரம்மமே நீ என்பதை அனுபவம் மூலம் தெரிந்துகொள். விடுதலை, அல்லது ஆத்ம ஞானம் உன் கைகளிலேயே இருப்பதைத் தெரிந்து கொள்.

உன்னிடம் அளவற்ற நம்பிக்கையை வளர்த்துக்கொள். பிறகு அந்த நம்பிக்கையை மற்றவர்களுக்கும் வழங்கு.

சிந்தனை என்பது மகத்தான பயன்களைத் தருவது. ஆனால், அந்த சிந்தனையின் தொண்ணூறு வீதமான ஆற்றல் சாதாரண மனிதனால் வீணாக்கப்படுகிறது.

எனவே அவனுக்கு இழப்புகளும் வரு


கிறது. சரியான பயிற்சியைப் பெற்ற மனமோ, மனிதனோ ஒரு போதும் தோற்க மாட்டான் ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் சமய அறிவுப்போட்டி

## இல: 06





அன்பான மாணவர்களே,
நமது சமய அறிவை ஊட்டும் வண்ணம் இந்த 'பக்தி விஜயம் வெளிவருகிறது. இது உங்களுக்கும் வழிகாட்டியாக திகழ்கிறது. பரீட்சைகளில் புள்ளிகள் பெறுவதற்கு மட்டுமல்ல, வாழ்க்கையிலும் வெற்றிபெறுவதற்கு சமயத் தகவல்கள் மிக அவசியம்.

இல: 04 சமய அறிவுப்போட்டியில் பெருமளவில் நீங்கள் பங்கு பற்றியிருந்தீர்கள். அனைவரையும் பாராட்டுகிறோம் ..

### இல: 04 போட்டிக்கான விடைகள்

01. விநாயகர் சதுர்த்தி, 02. விசுவாமித்திரர், 03. கலிக்காமர், 04. இறக்கை, 05. வாழை, 06. அர்ஜுனன், 07. கிருஸ்ணர்,08. அர்த்தநாரீஸ்வரர், 09. புலியினுரிதோலார், 10. வலம்


1ம் பரிசு
மதுஷாலினி, 23, காக்கைதீவு, கொழும்பு 15
2ம் பரிசு
ஜெ. துஷான்யா, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி
3ம் பரிசு
மயூரன், முருகாபுரி, திருக்கோணமலை

## இம்மாத வினாக்கள்



01. ............................... இறந்த நாள் தீபாவளியாகும்
02. விளக்கீடு ........................ மாதத்தில் அனுட்டிக்கப்படும்
03. சுவாமி விவேகானந்தரின் ........... வது பிறந்ததின ஆண்டு இதுவாகும்
04. திருக்கேதீச்சரத் தலத்தின் தீர்த்தம் ....................
05. கந்த சஷ்டி விரதம் ................. நாட்களுக்கு அனுட்டிப்பர்
06. திருநீற்றை ...................... என்று சொல்லி பூச வேண்டும்
07. அஷ்டாங்க நமஷ்காரம் செய்பவர்கள் ................. ஆவர்
08. நீலகண்டன் எனும் பெயர் ஈசனுக்கு ............ உண்டதால் வந்தது
09. மழைக்குரிய தெய்வம் ................ பகவான் ஆவார்
10. பட்டினத்தாரின் இயற் பெயர் ...................... ஆகும்

சரியான விடைகளை எழுதி அனுப்புகின்ற மாணவர்கள், குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசளிக்கப்படுவார்கள்.






அனுப்பவேண்டிய முகவரி :
ஆசிரியர்,
'பக்தி விஜயம்'
555, புதுத்தெரு,
மன்னார்.


(இப்பக்கத்தை கத்தரிக்க வேண்டாம் .. வேறு பேப்பரிலேயே எழுதி அனுப்பவும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொண்டாடுவதற்கு முன், ஒருநிமிடம்



## நெருங்கி வரும் பண்டிகைகள்!



**தீபாவளி**

**13.11.2012 , செவ்வாய்க்கிழமை**

தீபாவளி என்றாலே குதூகலம்தான் இந்த நன்னாளை எப்படியெல்லாமோ திட்டமிட்டு கொண்டாடி உறவுகளை சந்தோஸப்படுத்த ஒவ்வொருவரும் காத்திருப்பர். இந்துப் பண்டிகைகளிலேயே அதிக மகிழ்ச்சியை தருவது இதுவாகும். நரகாசுரனை வதம் செய்தபடியால் இந்த நாள் கொண்டாடப்பட்டு வருவது குழந்தைகளுக்குக்கூட தெரியும்.

அந்த அசுரன் கேட்டுக்கொண்டவாறே நாம் இதனை கொண்டாடினாலும், நமக்குள்ளேயும் அதன் தாக்கமும், மாற்றமும் அன்றைய தினம் நிகழ்வதை நாம் காணாமல் இருக்கிறோம். பட்டாசுச் சத்தங்களிலும், விருந்துகளிலும் நமது கவனம் சிதறிவிடுவதால் நமது உள்ளுணர்வில் நடந்துகொண்டிருக்கும் அற்புதமான ஒரு நரகாசுர நிகழ்வை அனுபவிக்காமல் இருந்துவிடுகிறோம்.

அந்த நிகழ்வு ..

மனதுக்குள் வாழும் அசுரனை மனதுக்குள் வாழும் தெய்வம் அன்று வதம் செய்யும். மனசும் பட்டாசாய் மாறி மத்தாப்புப் பூக்களாய் சிதற, அதில் அரக்க குணமும் பாவங்களும் அழிவைச் சந்திக்கும். இத்தினத்தில் இந்த மகத்தான அனுபவத்தையும் பெற்றுவிட்டால் அதுவே நிறைவான கொண்டாட்டம். தீபாவளியின் தத்துவமே இதுதானே! மனதுக்குள் இருக்கும் அசுரனை வென்று மென்மையும், மேன்மையும் பெறவேண்டிய நாளும் இதுதான் என்று நாம் ஏன் நினைக்கக் கூடாது? ..

**மனதுக்குள் வாழும் அசுரனை மனதுக்குள் வாழும் தெய்வம் வதம் செய்யும் நாள்!**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்த சஷ்டி
## 14.11.2012 , புதன்கிழமை


சூரபத்மனை அழித்தான் முருகன்! முருகு என்ற சொல்லின் அர்த்தம் அழகு என்பதாம். அதனால் முருகனும் அழகனான். ஆனால் வீரம் என்ற பொருளுக்கு இந்தப் பெயர் இன்னும் அதிகமாய் பொருந்துவதாக சொக்கிப் போகிறார்கள் தமிழ்ச் செல்வர்கள்.

சூரனை நெருங்கும்முன் அவனின் ஏகப்பட்ட வீரர்களை அழிக்கவேண்டியிருந்தது முருகனுக்கு. இந்தப் போர் ஐப்பசி வளர்பிறையில் நடந்துகொண்டிருந்தது. கடைசியில் சூரனை எதிர்கொண்டு அழித்த நாள் சஷ்டி திதியாக இருந்தது.

கந்தனுக்கு உகந்தது சஷ்டி. அதாவது ஆறு. இதனால் இந்த சஷ்டி விரதமும் ஆறு நாட்களுக்கு கொண்டாடப்பட்டு வருகிறது.

# முருகன் என்றால் அழகா? வீரமா?





குற்றாலம் சித்ர சபை | மதுரை வெள்ளி சபை | திருவாலங்காடு ரத்தின சபை | சிதம்பரம் பொற்சபை | திருநெல்வேலி தாமிர சபை

## தெரியுமா சேதி? ..
## கார்த்திகைதீப தினத்தில் பஞ்ச மூர்த்திகளும் நம் வீட்டு முற்றத்தில் ...!!



## கார்த்திகை தீபம்
## 27.11.2012 , செவ்வாய்க்கிழமை

தீபம் என்றாலே அது வணக்கத்திற்கு உரியதே. அக்னிதேவனை வணங்குதலுக்கு வழியாகவும் தீபத்தை கருத வேண்டும். ஊரெங்கும் ஒளியேற்றும் தீபங்கள் ஒட்டுமொத்தமாகவே மனங்களிலுள்ள இருளை இந்நாளில் அகற்றுகின்றன. இதைப் புரிந்துகொண்டு இச்சந்தர்ப்பத்தில் தீப ஒளியை நம் மனங்களுக்குள் பாய்ச்ச தவறக்கூடாது. நம்மை நோக்கி வருகின்ற பண்டிகைகள் அனைத்துமே அளவற்ற புண்ணியம் நிறைந்தவை. அதிலும் இந்த கார்த்திகை தீப நிகழ்வானது ஒருபடி மேலாக கருதப்பட்டு வணங்கப்படுகின்றது. 'தீப மங்கள ஜோதி நமோ நமோ ..' என்று பாடுகிறார்கள் அல்லவா!

கார்த்திகை தினத்தை சிரத்தையுடன் அனுட்டித்தால் நெருப்பினால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் நம்மை அணுகாது. அடிமுடி காணமுடியாமல் தடுமாறிய பிரம்மாவுக்கும், விஷ்ணுவுக்கும் முன்னால் ஜோதி வடிவமாகத்தான் சிவபெருமான் உயர்ந்து நின்றார்.

ஊரெங்கும் ஏற்றப்படும தீபச்சுடர்களில் இவ்வண்ணமே எம்பெருமான் காட்சி தருகிறார். அச்சமயத்தில் அவரைத் தரிசித்துமகிழ பஞ்ச மூர்த்திகளுமே பூவுலகம் வந்துவிடுகிறார்களாம். என்னே பாக்கியம் நமக்கு! கூடவே அவர்களின் அருளும் நம் வீட்டு முன்றலில் கிடைக்கும்போது, நாமும் ஜோதி வரிசைகளை வைத்து வழிபடும் வாய்ப்பை தவற விடலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீகத் தகவல் அறிவோம் ..


தீபாராதனைகளில் பல வகைகள் உண்டு.இறைவனுக்குச் செய்யும் 16 வகை உபசாரங்களில் தீபாரதனையும் ஒன்று.

தெய்வங்கள் பலரும் தீபாராதனையின் போது அந்த தீபத்தில் வந்தமர்ந்து, பெருமானை தரிசித்துச் செல்கிறார்கள் என்பது ஐதீகம். தீப வழிபாட்டில் பல வகை தீப வரிசைகள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு வரிசையும் அர்த்தங்களோடு கூடியிருக்கின்றன.

நட்சத்திர தீபங்கள் காட்டப்படும்போது நட்சத்திரங்கள் இறைவனை வழிபட்டு ஒளி பெறுகின்றன.

ஒன்பது தீபங்கள் நவ சக்திகளைக் குறிக்கும். ஏழு தீபங்கள் சப்த மாதர்களைக் குறிக்கின்றன. பஞ்ச தீபங்கள் நிவர்த்தி கலை, பிரதிட்டா கலை, வித்யா கலை, சாந்தி கலை, சாந்தி அதீத கலை என்ற ஐந்து கலைகளைக் குறிக்கும்..

மூன்று தீபங்கள் சூரியன், சந்திரன், அக்னி என்ற மூன்று ஒளிகளையும், ஒற்றை தீபம் சரஸ்வதியைக் குறிப்பதாகவும் சொல்வர்.



## தீபாராதனை

தீபாரானை நடக்கும்போது இறுதியாக கும்பதீபம் காண்பிக்கப் பெறும். கும்பதீபமானது சதாசிவ தத்துவத்தைக் குறிக்கும்.

தீபாராதனை செய்யும்போது மூன்று முறை காட்டுவார்கள். முதல் முறை உலக நலத்திற்காகவும், இரண்டாம் முறை ஊரில் உள்ள மக்களின் நல்வாழ்வுக்காகவும், மூன்றாம் முறை ஐம்பெரும் பூதங்களால் இடையூறின்றி நல்லது நடக்கவேண்டும் என்பதற்காகவுமாக மும்முறை தீபம் காட்டப்படுகிறது.



## நந்தியின் காதுக்குள் ரகசியம் பேசும் பக்தர்களும் இருக்கிறார்களே! இது ஏன்?

சிவாலய வழிபாட்டின்போது ஆலயங்களில் இப்படி ஒரு நிகழ்வையும் காணலாம்தான். நந்தியின் காதில் சிவ பக்தர்கள் சிலர் ஏதோ ரகசியம் சொல்கிறார்கள் என்று கருதும் வழக்கம் இருக்கிறது. ஆனால் அது ரகசியம் சொல்வது அல்ல.

பொதுவாக சிவாலய வழிபாட்டின்போது நந்திகேஸ்வரரின் இரண்டு கொம்புகளின் வழியாக பெருமானை தரிசனம் செய்யவேண்டும் என்பது மரபு. பிரதோஷ காலத்தில் சிவபெருமான் நந்தியின் இரு கொம்புகளிடையே நடனம் புரிவதாக ஐதீகம் உண்டு. எனவே பிரதோஷ காலத்தில் நந்திதேவரை வலம் வந்து இரு கொம்புகளிடையே பெருமானை வணங்குகிறார்கள். இதை அவதானிப்பவர்கள் நந்தியிடம் வேண்டுதல் பற்றி ரகசியம் கூறுவதாக நினைத்து வருகிறார்கள்.

**தெய்வீக சந்தேகங்கள் ..**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசியின் அருமை!

# நலம் தரும் நாட்களும் விரதங்களும்



18.10.2012 - வியாழக்கிழமை
**சதுர்த்தி விரதம்**

19.10.2012 - வெள்ளிக்கிழமை
**முதலாம் ஐப்பசி வெள்ளி**

20.10.2012 - சனிக்கிழமை
**ஷஷ்டி விரதம்**

21.10.2012 - ஞாயிற்றுக்கிழமை
**சரஸ்வதி பூஜாரம்பம்**

22.10.2012 - திங்கட்கிழமை
**அட்டமி – நவமி**

23.10.2012 - செவ்வாய்க்கிழமை
**மகாநவமி விரதம்**
**சரஸ்வதி பூஜை**

24.10.2012 - புதன்கிழமை
**விஜயதசமி,**
**ஜமீவிருட்ச பூஜை,**
**கேதாரகௌரி விரதாரம்பம்**

25.10.2012 - வியாழக்கிழமை
**ஏகாதசி விரதம்**

26.10.2012 - வெள்ளிக்கிழமை
**இரண்டாம் ஐப்பசி வெள்ளி**

27.10.2012 - சனிக்கிழமை
**சனிப்பிரதோஷ விரதம்**

29.10.2012 - திங்கட்கிழமை
**பூரணை விரதம்**
**திருமூலர் குருபூஜை**

30.10.2012 - செவ்வாய்க்கிழமை
**ஐப்பசி பரணி**

31.10.2012 - புதன்கிழமை
**கார்த்திகை விரதம்**

02.11.2012 - வெள்ளிக்கிழமை
**சங்கடஹர சதுர்த்தி விரதம்**

07.11.2012 - புதன்கிழமை
**அட்டமி – நவமி**

09.11.2012 - வெள்ளிக்கிழமை
**நான்காம் ஐப்பசி வெள்ளி**


10.11.2012 - சனிக்கிழமை
**ஏகாதசி விரதம்**

11.11.2012 - ஞாயிற்றுக்கிழமை
**பிரதோஷ விரதம்**

12.11.2012 - திங்கட்கிழமை
**இரவு சந்திர உதயத்தில்**
**நரக சதுர்த்தி ஸ்நானம்**


13.11.2012 - செவ்வாய்க்கிழமை
**தீபாவளி, கேதாரகௌரி விரதம்,**
**மெய்கண்டதேவர் குருபூஜை**

14.11.2012 - புதன்கிழமை
**கந்த ஷஷ்டி விரதம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வேதங்களை அறிவதற்கும், அனுபவிப்பதற்கும் இந்து மக்களில் பலரும் ஆர்வமாயிருப்பார்கள். ஆனால் அதிலுள்ள சாஸ்திரீய சொற்களும், சங்கேதங்களும் எல்லோராலும் புரிவதென்பது கடினமே!

அதனால்தான் அவைகளை இலகுவாக்கி, பாமரர்களும் புரிந்துகொள்ளும் வண்ணம் புராணங்களாக அமைத்தார்கள், கதைகளாக விளக்கினார்கள்.

அதனால் புராணங்களை 'வேதத்தின் கண்ணாடி' என்று கூறுவர். 'புரா' என்றால் 'முற்காலத்தில் நடந்தது' என்று பொருள். வேதங்களைப் போலவே புராணங்களும் பிரம்மாவால் தரப்பட்டது என சாந்தோக்ய, உபநிஷத், மத்ஸ்ய புராணங்கள் கூறுகின்றன.

புராணங்களில் மொத்தம் பதினெட்டு உள்ளன. பதினெட்டு புராணங்களிலும் 5,09,500 சுலோகங்கள் உள்ளன. இதில் மிகவும் பெரியது ஸ்கந்த புராணம். இது 1,81,000 சுலோகங்களைக் கொண்டது.

அதுபோல புராணங்களில் மிகச் சிறியது மார்க்கண்டேய புராணம். இதில் 9000 சுலோகங்களே உள்ளன.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புராணங்கள்








புராணங்களும், சுலோகங்களின் எண்ணிக்கையும் ..

| | |
|---|---|
| ஸ்கந்த புராணம் | -- 181,000 |
| பத்ம புராணம் | -- 55,000 |
| நாரத புராணம் | -- 25,000 |
| வராக புராணம் | -- 24,000 |
| வாயு புராணம் | -- 24,000 |
| மத்ஸ்ய புராணம் | -- 24,000 |
| விஷ்ணு புராணம் | -- 23,000 |
| கருட புராணம் | -- 19,000 |
| பிரும்ம வைவர்த்த புராணம் | -- 18,000 |
| பாகவத புராணம் | -- 18,000 |
| கூர்ம புராணம் | -- 17,000 |
| பவிஷ்ய புராணம் | -- 15,500 |
| அக்னி புராணம் | -- 15,000 |
| பிரம்மாண்ட புராணம் | -- 12,000 |
| லிங்க புராணம் | -- 10,000 |
| பிரம்ம புராணம் | -- 10,000 |
| வாமன புராணம் | -- 10,000 |
| மார்க்கண்டேய புராணம் | -- 9,000 |












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபாவளி ஸ்பெஷல்!!

**மங்கையர் தீபாவளி டிப்ஸ் ..**




# தீபாவளிக் கோலங்கள்..






**வாசலில் கோலம் போடுவது என்பது**
இந்துக்களின் பாரம்பரிய தனிப்பெரும் வழக்கம். பொழுது விடிந்ததும் பால் வாங்குவது, தேனீர் கலக்குவது, முற்றம் பெருக்குவது, உணவு தயாரிப்பதைப்போல ஒரு சாதாரண வேலைதான் முற்றத்தில் கோலம் போடுவதும்.

ஆனால் இது ஒரு அதிவிஷேச காரியமாக மாறி, அபூர்வமாகவே இப்போது பயன்பட்டு வருகிறது. அந்தண குலத்தோரின் வீடுகளிலும், இந்திய வம்சாவளியினரின் வாழ்விடங்களிலும் மட்டுமே இதை ஓரளவுக்கு காணமுடிகிறது. இதற்கும் மேலாக யாழ்ப்பாண வதிவிடங்களிலும் சில வீடுகளில் காணலாம். இதைத்தவிர, நம் சமயப் பொக்கிஷமாக கோலத்தை இனங்கண்டு அன்றாடம் வாசலில் கண்டு மகிழும் வழக்கத்திற்கு முழுமையாக நாம் இன்னும் வரவில்லை .. பண்டிகை நாட்களிலேனும் எல்லோர் வாசலிலும் கோலமிட்டிருந்தால், அதைவிட அழகும், தெய்வீகமும் வேறேதும் இருக்கமுடியாது ..






**மிக மிக எளிதான** கோலங்கள் இவை ..

நினைத்த மாத்திரத்தில் சில நிமிடங்களிலேயே போட்டுவிடலாம். விரத நாட்கள், பண்டிகை நாட்களுக்கென்று உருவானவை.

தவிர, வெள்ளி செவ்வாய் போன்ற தூய்மையான நாட்களிலும் இக்கோலங்கள் எல்லையற்ற மங்கலத்தை இல்லங்களில் நிறைக்கக் கூடியவை.

நமது மங்கையர்கள், பார்த்த மாத்திரத்திலேயே பிரமிப்பதை முதலில் விடவேண்டும். ஆர்வத்தோடு கைகளுக்கு பயிற்சி கொடுத்தால், சில நிமிட வேலைதான்! பயிற்சியில் வந்ததும், நாளுக்கொரு கோலம் நீங்கள் வாசலில இடுவதை நீங்களே தடுக்க முடியாது. அதுதான்ஆயிரக்கணக்கில் இருக்கிறதே!

> மனதை ஒரு முகப்படுத்தி கோலமிடும் பெண்கள் அழகும், மெல்லிடையும் பெறுவது மட்டுமல்ல
> வறுமையோ வசதியோ, தமது இல்லத்தை தெய்வீகமாக்கி விடுகிறார்கள்.
> எங்கே, அழகுறு கோலங்களால் தீபத்திருநாள் ஒளி பெறட்டும் !..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாபாரதக் கதையை வீட்டில் வைத்துப் படிக்கக்கூடாது என்று சிலர் கூறுகிறார்களே!!! இது ஏன்?............

## தெய்வீக சந்தேகங்கள்?..

மகாபாரதக் கதை ஒரு போராட்டக் கதையாக மனங்களில் பதிந்துவிட்டதும், அது ஒரு குடும்பத்திற்குள் நடந்த கோரமான சண்டை என்பதும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

போரில் பெரும் எண்ணிக்கையில் மனித உயிர்கள் பலியானதும், ரத்த உறவுகளிடையே இந்த அழிவு நடந்ததும் நினைத்தாலே நடுங்க வைக்கும். போரின் முடிவிலே பாண்டவர்கள் பக்கம் ஏழு பேரும், கௌரவர்கள் பக்கம் மூன்று பேருமாக மொத்தம் பத்து நபர்களே எஞ்சி நின்றனர்.

இப்படியான ஒரு யுத்தம் ஏன் தேவைப்பட்டது, இதை நிறுத்தியிருக்க முடியாதா என்று பாரதத்தைப் படிப்பவர்கள் பல கட்டங்களில் துடித்துவிடுவார்கள்.

அதிலும் கிருஷ்ண பரமாத்மா, பிதாமகர் பீஷ்மர் போன்ற ஞானசீலர்கள் இருந்தும் இதனை ஏன் நிறுத்த முடியவில்லை என்ற கேள்விகளும் இருக்கத்தான் செய்கின்றன. சொல்லப்போனால் சமாதானத்திற்காக இவர்கள் மேம்போக்காக செயல்பட்டதும், போர் என்ற தீர்மானத்தில் நாட்டம் கொண்டிருந்ததும் பல பகுதிகளில் தெரிய வருகிறது.

பலரும் இரத்தம் சிந்தி, உறவுகள் போராட்டத்தில் தள்ளப்பட்டதுபோல தமது குடும்பத்திலும் வந்துவிடுமோ என்ற பயத்தால் வீட்டில் மகாபாரதம் படிக்க தயங்குகிறார்கள். ஆனால், சாஸ்திர ரீதியாக இதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

தவிர, நம் வாழ்வில் மகாபாரதத்தின் சாயல் இல்லாமல் எந்த நிகழ்ச்சியும் இருக்க வாய்ப்பில்லை. கூடவே அதிலிருந்தே நம் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை கண்டறியும் அனுகூலமும் இருப்பதால் மகாபாரதம் என்பது ஒரு வரப்பிரசாதமே! ..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தித்திக்கும் தீபாவளி







திருமுருக
கிருபானந்த வாரியார்

# அஞ்ஞானம் அகலும் நாள்

**தீபாவளி எனும் நந்நாளை பொன்னாளாக கருதி கொண்டாடி மகிழ்கிறார்கள். இப்பண்டிகை தருகின்ற இன்பமானது ஒவ்வொரு குடும்பத்தையும் சிரிக்க வைக்கிறது, கவலைகளை மறக்கச் செய்கிறது ..**

குதூகலத்திற்கும், கொண்டாட்டத்திற்கும் அப்பால் புண்ணியத்தையும் நமக்காக இந்த நாள் கொண்டு வருகின்றது என்பதையும் நாம் அறிந்துகொள்ள வேண்டுமல்லவா?

நரகாசுரனை கண்ணபிரான் சங்கரித்த நாளாக மட்டுமே நாம் இதனை அறிந்துகொண்டு கொண்டாடி வருகிறோம்.

அது அவ்வாறே ஒரு பக்கம் இருக்கட்டும். ஆனால், ஒரு சாதாரண அரக்கனை கொல்வதால் மட்டும் ஒரு கொண்டாட்டத்தை நடத்துவதானால் இரண்ணியனைக் கொன்ற நாள், இராவணனைக் கொன்ற நாள், கம்சனைக் கொன்ற நாள், துரியோதனனைக் கொன்ற நாள், இன்னும் இரண்ணியாட்சன், ஜலந்தராசுரன் என்று பிரபல அசுரர்களை ஒழித்த எல்லா நாட்களையுமே நாம் கொண்டாட வேண்டியிருக்கும்.. அதற்கு நம் ஆயுளே போதாமலிருக்கும்..ஆகவே, தீபாவளி என்பது நரகாசுரனை கொன்றதால் மட்டுமே ஏற்பட்டதன்று.

எத்தனையோ அர்த்தங்களும், புண்ணியங்களும் அந்த நாளில் நிறைந்து காணப்படுகின்றன. அவைகளையும் அறிந்துகொண்டு முடிந்தளவுக்கு கடைப்பிடித்தால் அந்நாளின் மகிழ்ச்சியோடு, இறையருளும் இனாமாகக் கிடைக்கும் ..

தீபம் - விளக்கு, ஆவளி - வரிசை அதாவது தீபங்களின் வரிசையானது தீபாவளியாம் ..

தீபத்தை வரிசையாக ஏற்றிவைத்து சிவபெருமானை வழிபடுவதற்கு உரிய நாள் தீபாவளி.

## தீபாவளி விரதம் ..

தீபாவளி முதல் நாளன்று பகல், இரவு முழுவதும் பட்டினி இருந்து, இரவில் தீபங்களை வரிசையாக ஏற்றிவைத்து சிவபூஜை செய்து, பிரம்ம முகூர்த்தத்தில் எண்ணை ஸ்நானம் செய்து, சிவபூஜையை முடித்துக்கொண்டு, விடியுமுன் புத்தாடை உடுத்தி, சுத்த சைவ உணவு உண்டு அனுட்டிப்பது தீப்பாவளி விரதமாகும்.

மாசி மாத அமாவாசைக்கு முன்தினம் மகா சிவராத்திரியும், ஐப்பசி மாத அமாவாசைக்கு முன்தினம் தீபாவளியும் வரும். சிவபெருமானை வழிபடும் விரதங்கள் எட்டு என கந்தபுராணத்தில் ஏழாவது காண்டமாகிய உபதேச காண்டம் பகர்கிறது ..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையாவன :

01. கார்த்திகை சோமவார விரதம்
02. உமா மகேஸ்வர விரதம் (கார்த்திகைமாத பௌர்ணமி)
03. திருவாதிரை விரதம் (மார்கழி மாதத்தில்)
04. மகா சிவராத்திரி விரதம் (மாசி மாதத்தில்)
05. கல்யாண விரதம் (பங்குனி உத்திரம்)
06. பாசுபத விரதம் (தைப்பூசம்)
07. அஷ்டமி விரதம் (வைகாசி பூர்வ பட்ச அஷ்டமியில்)
08. கேதாரமாவிரதம் (இதுவே தீபாவளி)







தீப மங்கள ஜோதியாக விளங்கும் பெருமானை நிரம்பலாக விளக்கேற்றி வணங்கினார்கள் நமது முன்னோர்கள்.

பிருங்கி முனிவர் சிவபெருமானை வணங்கும்போது சக்தி தேவியை விலக்கி, சிவத்தை மட்டும் வலம் வந்து வணங்கிய காரணத்தால் உமாதேவியார் வெகுண்டு இறைவனின் இடப்பாகம் பெறும்பொருட்டு, திருக்கைலாய மலையினின்று நீங்கி, கௌதம முனிவருடைய வனத்தையடைந்தார். அவ்வனம் அம்பிகையின் வரவால் மிகுந்த செழிப்புற்றது. தவளையுடன் பாம்பும், பாம்புடன் கீரியும் நட்புறவாடினவாம்!

கௌதமர் கௌரியை தொழுது துதித்தார். தீபாவளி விரதத்தை கௌதமர் தேவிக்கு கூற, உமையம்மையாரும் அவ்விரதத்தை நோற்று ஈசனாருடைய இடப்பாகத்தைப் பெற்று மகிழ்ந்தார்.

முதலாவதாக இந்த கேதார விரதத்தை கௌரியம்மை அனுட்டித்த காரணத்தால் இதற்கு கௌரி விரதம் என்று பெயர் வந்தது.

ஆனால் தீபாவளி விரதம் காலாந்தரத்தில் பல மாறுதல்களை சந்தித்து கவனிப்பாரற்றுவிட்டது. இந்தியாவில் குறிப்பிட்ட இந்து சமூகங்களும், இலங்கையில் பிராமண சமூகத்தினரும் இதில் கவனமெடுத்து வருவது தெரிகிறது.

தீபாவளி என்றால் கொண்டாட்டம் மட்டுமே என்ற நிலையில் குறிப்பிட்ட சில சமய நிகழ்ச்சிகள், கோயில் வழிபாடுகளோடு நிறுத்திக்கொள்கிறோம். ஆயினும் மனநிறைவோடும், மற்றவர்களின் மகிழ்ச்சியை கண்டு இன்புறும் தூய்மையோடும் தீபாவளியை நாம் கழிப்பதென்பதில் சந்தேகமில்லை. அந்த நாள் தரும் மனச் சந்தோஸத்திற்கு நிகருமில்லை.

தீபாவளியன்று தூங்கி விழித்து அதிகாலை எண்ணெயிட்டு நீராடி, புத்தாடை உடுத்தி, பலகாரங்கள் சாப்பிட்டு, பட்டாசுகள் வெடித்து நண்பர்களையும் பந்துமித்திரர்களையும் வாழ்த்தியும், குசலம் விசாரித்தும் மகிழ்வது நடைமுறையாக உள்ளது.

மறு பக்கம் ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டாசுகள் இறைவனுடைய திருநாமங்களாக தீபாவளியில் மாறுகின்றன!
## அவை தீய குணங்களை சுட்டுத்தள்ளுகின்றன!!




தீபாவளியை அவரவர்க்கு தெரிந்தவாறும், அந்தந்த பிரதேச வழக்கத்திற்கு ஏற்றவாறும் கொண்டாடி ஒருவாறு வழியனுப்பிவிடுகின்றனர். வட இந்தியாவில் நரகாசுரனை வதம் செய்த நாள்தான் தீபாவளி என ஐப்பசி மாத அமாவாசைக்கு முன்தினம் நீராடி பட்டாசுகள் வெடித்து, தீபங்கள் ஏற்றி, வழிபாட்டுடன் புத்தாடை உடுத்தி, உயர்ந்த உணவுண்டு அமாவாசை தினம் அதிகாலையில் புதுக்கணக்கு எழுதி, ஏழை எளியவர்களுக்கு இனிப்பும், ரொட்டியும் வேண்டிய அளவு தானமாக கொடுத்தும் கொண்டாடி வருகிறார்கள்.

தீபங்களை ஏற்றினால் இருளானது தானே விலகி விடுகிறது. அதுபோல நம் உள்ளக்கோயிலிலே ஞானவிளக்கை ஏற்றினால் அறியாமையாகிய இருள் தானே விலகிவிடும். இவ்வாறு ஞான விளக்கேற்றி அறியாமையை அகற்றுவதே தீபாவளி பண்டிகையின் நோக்கம். நம்மிடையே உள்ள காமம், குரோதம், கோபம், மோகம், மதம், மாத்சர்யம் என்ற தீய சக்திகளை இறைவனுடைய திருநாமங்களாகிய பட்டாசுகளினால் சுட்டுத்தள்ள வேண்டும்.

இறைவனுடைய திருநாமங்கள் தீய சக்திகளை அழிக்கும் படைக்கலங்களாகும்.

மனிதனுடைய துன்பங்கள் அனைத்துக்கும் மூல காரணம் அஞ்ஞானம்தான். அஞ்ஞானம் என்றாலும், அறியாமை என்றாலும் ஒன்றுதான். அது அழிவைத் தேடித்தருமேயன்றி உயர்வைத் தராது.

மனிதனுடைய உயர்வுக்குக் காரணம் அறிவுதான். அறியாமையை அகற்றி, அறிவை வளர்க்கவேண்டும். தீபாவளி உணர்த்தும் இத் தத்துவத்தை அறிந்து, நாம் தீபாவளி விரதமிருந்து இறைவன் திருவருளைப் பெற்றால், தீபாவளிக்கு செலவழிக்கும் பணத்திற்கு இரட்டிப்பு பலன் கிடைக்குமல்லவா?







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(03) அன்றைய ஆரம்பம் ..



மன்னார் பிரதேச நிகழ்வுக் காட்சிகள்..



இன்றைய நிறைவுகள்!

# சுவாமி விவேகானந்தரின் 150 வது ஜனன தின விழா ஏற்பாடுகள் ..

நாடெங்கும் நடைபெற்று வருகின்ற சுவாமிஜியின் ஜனன தின நிகழ்ச்சிகள் மன்னாரிலும் வெகுசிறப்பாக இடம்பெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்டங்கள்தோறும் சுவாமிஜியின் விழிப்பூட்டும் கருத்துக்களும், இந்து சமய மேன்மைகளும் முக்கிய நிகழ்ச்சிகளாக நடாத்தப்படுகின்ற அதேசமயத்தில், மன்னாரிலும் இதற்கான முக்கிய விழாக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிராம மட்டங்களிலும், நகர மட்டத்திலும் கிரமமாக நிகழ்வுகளை நடத்துவதற்கான கலந்துரையாடல் ஒன்றும் சமீபத்தில் இடம்பெற்றது.


மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசியக் கல்லூரியில் கடந்த 15.07.2012 அன்று விழாக் குழுவினர்கள் அனைவரும் அழைக்கப்பட்டு, கூட்டம் நடாத்தப்பட்டது. இருபதிற்கும் மேற்பட்ட கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கே பிரதிநிதிகளும் தெரிவானார்கள். நந்திக்கொடிகள், வாழை தோரணங்கள் சகிதம் அலங்கரிக்கப்படும் வீதிகள் முதலாக, இந்துக்களின் உள்ளத்தில் பேரொளியை தரவல்ல சமய, கலை நிகழ்ச்சிகள்வரை விரிவான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த திரு. ராதாகிருஷ்ணன் அவர்களின் பிரசன்னத்தோடு திருவாளர்கள். திருநாவுக்கரசு, தயானந்தராஜா, பிருந்தாவனநாதன், ராமகிருஷ்ணன், நடேசன், சூரியகுமார் ஆகியோருடன் பல முக்கியஸ்தர்களும் விழா ஒழுங்குகளை சீரமைக்க, பெருமளவில் அன்பர்கள் ஒத்துழைப்பு வழங்கினர் ..





மன்னார் பிரதேச நிகழ்வுக் காட்சிகள்..







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்களில் இருந்து
'த்ரில்லிங்' தொடர் ..

# கற்கடேஸ்வர நாதர்!



## தெரிந்த இராசிகள், தெரியாத தெய்வங்கள்! ..

சென்ற இதழ் தொடர்ச்சி ..

## நண்டு செய்த சிவபூஜையில் மகிழ்ந்தார் இறைவன் ..! மலைத்தான் இந்திரன் ..!!

நாள் இரவு முழுவதும் விழித்திருந்து உருவிய வாளுடன் காத்திருந்த இந்திரனை அந்தக் காட்சி திகைக்கச் செய்தது!

முதலாவதாக மலர்ந்த அந்த ஒரே ஒரு மலர், மலர்ந்த மறு விநாடியே நீரினுள் இழுத்துச் செல்லப்பட்டது. அந்த இடத்தில் நீர்க்குமிழிகள் அடுத்தடுத்து மேல் நோக்கி வந்து வெளியேறின.

**என்ன ஆச்சரியம்! இது எப்படி சாத்தியம்!!**

**அப்படியானால் அந்த மலர் எங்குதான் செல்கிறது? யார் அதை இழுத்துச் சென்றார்கள்.?**

வியப்பின் உச்சத்தில் தடுமாறிய இந்திரன் அந்த மலர் அமிழ்ந்த வழியே தேடிச் சென்றான். தாடாகத்தின் கரையிலே விடியற் கருக்கலில் குளித்து நிற்கின்ற பெருமானின் கோயிலுக்குள் வந்து சேர்ந்தான். அப்படியே கருவறைக்குள் எட்டிப்பார்த்தவன் கண்ட காட்சி அவனை உறையச் செய்தது!!



ஆமாம்! எந்த மலரை தன் கண்ணெதிரே கவர்ந்து செல்லக் கண்டானோ அதே தாமரை கருவரையில் இருந்த இறைவனின் முடிமேல் வைக்கப்பட்டிருந்தது!

இந்த அதிசயத்தால் தேவேந்திரனின் மேனி நடுங்கியது. தான் பறித்து பூஜிக்க வேண்டிய மலர்கள் தினமும் இப்படித்தான் கவரப்பட்டு இங்கே வந்துவிடுகிறது என்பதை அறிந்தான். ஆயினும் வானவர் தலைவனாகிய தமது பூஜையில் குறுக்கிடுவதற்கு என்ன தைரியம் இருக்க வேண்டும்!

தான் சிவபெருமானை பூஜை செய்து மகிழ்விக்கும் முன்பாக வேறொருவர் மலர்களை கவர்வதை இந்திரனால் ஏற்க முடியவில்லை. தவிர, தனது இந்திர பதவியை அலட்சியம் செய்யும் அந்த மர்ம நபரையும் விட்டுவிட அவன் தயாராக இல்லை. உருவிய வஜ்ஜிராயுதத்துடன் ஆலயம் முழுவதும் தேடியும் யாரும் அகப்படவில்லை.

**"இன்று தப்பி விட்டான். நாளை பிடித்தே தீருவேன்'**

என்ற ஆதங்கத்தோடு வானுலகம் திரும்பினான் தேவேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாளும் நள்ளிரவு முழுதும் அகழிக்கரையில் காத்திருந்தான் இந்திரன். எதிர்பார்த்த அந்த அதிகாலை வேளையில் காத்திருந்த தருணம் வந்தது ..

அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.

நீருக்குள்ளிருந்து ஒரு பெரிய நண்டு வெளிப்பட்டு, மலர்ந்த தாமரையை நோக்கி நகர்ந்தது. சட்டென்று அம்மலரைப் பறித்து இழுத்துக்கொண்டு அகழிக்குள் அமிழ்ந்து மறைந்தது. மறுகணமே கரையேறிய நண்டு வேகமாக தாமரை மலரை இழுத்துச் சென்றது. கண்ணெதிரே நடந்த இக் காட்சியால் அமரேந்திரன் திகைத்துவிட்டான். ஆத்திரம் மேலிட நண்டினை துரத்தியபடியே சென்றான். இருவரின் வேகமும் ஆலயத்தின் கருவரையில் வந்து நின்றது.

வாளை உருவியவாறு நண்டினை இந்திரன் நெருங்கியபோது, அந்த நண்டு இறைவனின் முடிமேல் மலரை சமர்ப்பித்துவிட்டு லிங்கத்தை வேகமாக வலம் வந்தது. இதனை அறியாத இந்திரன் லிங்கத்தை தாக்கும் முகமாக வாளை வீசினான். நண்டும் லிங்கத்தின் பின்புறமுள்ள சிறிய துளையில் ஒளிந்துகொள்ள, வேகமாக வந்த வாள் பெருமானின் முடிமேல் பட்டது.

பக்தர்கள் இருவரின் போட்டியை இதுவரை ரசித்த பரம்பொருள் இனியும் சகிக்குமோ? ஆனையும், சிலந்தியும் போரிட்டு மடிந்த கதைபோல் ஆகிவிடக்கூடாது என்றெண்ணி அக்கணமே வெளிப்பட்டார் பெருமான். சட்டென அங்கே கிளம்பிய பேரொளியால் கருவரை மின்னியது. நண்டுக்கு அடைக்கலம் தந்த நிலையில் அமரேந்திரனுக்கு காட்சி தந்தார் ..

**"இந்திரா, சினம் தவிர். நாள்தோறும் எம்மை வழிபடும் ஜீவராசிகளில் இந்த நண்டும் ஒருவர். உன் பூஜையில் இவர் குறுக்கிடவில்லை. நெடுங்காலம் இவர் செய்துவந்த பூஜையில் நீதான் சில-நாள் குறுக்கிட்டாய் .. "** என்றார்.

பெருமானின் அமுதத் திருவாய்மொழியால் தெளிவடைந்த தேவேந்திரன் வீழ்ந்து வணங்கி சப்த நாடியையும் ஒடுக்கினான். ஈ, எறும்பு போன்ற சிற்றுயிர்களுக்கும் அருள்தரும் இறைவனின் கருணையை புகழ்ந்துபாடி கண்ணீர் சொரிந்தான்.

வானவப் பதவிக்கும் மேலான இடத்தில் ஒரு நண்டு பரமனிடம் இடம் பிடித்திருக்கும்போது, நாமும் அன்பால் அவரை இழுக்கமுடியாதா என்ன நேயர்களே?

## ஈ எறும்புக்கும் இசையும் இறைவனுக்கு முன் இந்திரப் பதவி எம்மாத்திரம்?



## அருமருந்து நாயகி! ..

### தீராத நோய்களையும் தீர்ப்பவள்

கடகம் என்றால் நண்டு என்று பொருள். எல்லோரையும் பல நாமங்களில் காத்து பரிபாலனம் புரியும் சிவபெருமான், கடக ராசிக்காரர்களையும் இன்னல்களிலிருந்து காப்பவராக இருப்பதால் கற்கடேஸ்வரர் என்ற திருநாமத்தை உடையவராகிறார்.

கடகராசிக்காரர்கள், அதிலும் ஆயில்ய நட்சத்திரக்காரர்கள் வழிபடவேண்டிய சிறப்பான ஈஸ்வரர் இவர்.

தன்வந்திரி பகவானுக்கு பூஜை செய்து மருந்து உட்கொள்வதற்கும், வேள்விகள் யாகங்கள் நடத்துவற்கும் உகந்த நாளாக திகழ்வது ஆயில்ய நட்சத்திரம் அமைகின்ற தினமே.

ஆயில்ய நட்சத்திர நாட்களில், அதுவும் குறிப்பாக தேய்பிறை – அஷ்டமி கூடிய நாட்களில் கற்கடேஸ்வரருக்கு பால் அபிஷேகம் செய்வித்து, அவருடைய தலத்து நாயகிக்கு சந்தனாதி தைலங்களாலும், நல்லெண்ணையாலும் காப்பிட்டு அந்த தைலத்தையே உட்கொண்டால் தீராத நோய்களும் தீர்ந்து விடுகிறதாம்!

இதனால்தானோ என்னவோ கற்கடேஸ்வரரின் தல அம்பிகைக்குப் பெயர் 'அருமருந்து நாயகி? என்பதாம்! ..

**கண்ணும், கருத்தும் குளிர்ந்துபோகும் கார்த்திகை மாதத்தில். தீபங்களின் பேரெழில் ஊரெல்லாம் தெரியும் ..**

மகாவிஷ்ணுவின் திருத்தலங்களில் தீப விழா எடுப்பது ஒருபடி அதிகம்தான். அன்றைய தினத்தில் தீபத்தை சிறப்பாக அவருக்கு கொண்டாடுகிறார்கள் பக்தர்கள். அன்றைய தினத்தில் பெருமாள் பொதுவாக வீதியுலா வருவதுண்டு.

பின்னர் திருப்பு மண்டபம் என்ற இடத்தில் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார். அதன் பின்னர் கோயிலுக்கு எதிரே உள்ள ஆலய நுழைவாயிலில் சொக்கப்பாணை கொளுத்துவதைக் கண்டு கழிப்பார்.

அதன் பின்னரே ஆலயம் செல்வார். அப்போது பக்தர்களுக்கு லட்டும், பொரியும் பொதுவாக தருவது வழக்கம் ..

## கார்த்திகை தீபம்!


கார்த்திகை தீபங்களில் 16 வகைகள் உள்ளன.

அவை தூபம், மகா தீபம், அலங்கார தீபம், நாக தீபம், விருட்சப தீபம், புருஷ ாமிருக தீபம், ஓல தீபம், கமடதி தீபம், கனு தீபம், வியான்ர தீபம், சிம்ம தீபம், துவஜ தீபம், மயூர தீபம், ஐந்தட்டு தீபம், நட்சத்திர தீபம், மேரு தீபம் ஆகியனவாகும்.

இவற்றுள் சிவனுக்குறிய மக-ாதீப விழாவை உமாதேவியே தொடக்கி வைத்ததாக புராணங்கள் கூறுகின்றன.

மகாதீபம் என்பது மிகவும் பிரம்மாண்டமான ஒளியை தருவதாகும். இதற்கு 3000 கிலோ பசுநெய், ஏழு அடி உயரம் கொண்ட பெரிய செப்புக் கொப்பரை, திரியாக பயன்படுத்த சுமார் 1000 மீட்டர் காடாத்துணி, கூடவே இரண்டு கிலோ கற்பூரம் பயன்படுத்தப்படுகிறது.

தமிழகத்திலுள்ள திருவண்ணாமலை மீது தொடர்ந்து 11 நாட்களுக்கு இந்த மகாதீபம் ஒளி வீசும். அந்த மலைமீது மட்டுமல்லாமல் அம்மலைத் தொடரில் கோயில் கொண்டிருக்கும் அத்தனை முருகன் ஆலயங்களிலும் இந்த மகா தீபம் ஏற்றப்படுகிறதாம்!



# கார்த்திகை மாத தீப மகிமைகள் ..

**வைசவர்களைப் போலவே வைஷ்ணவர்களும் கார்த்திகை தீபத்திருநாளைக் கொண்டாடுவர்.**

பிரம்மா சரஸ்வதியைவிட்டு விலகியிருந்த நேரத்தில் ஒரு யாகம் செய்தார். அதைக்கண்டு கோபமடைந்த சரஸ்வதி வேகவதி நதியாக உருவெடுத்து வந்து தடுத்தாள். பிரம்மாவின் யாகத்தைக் காக்க எண்ணிய பெருமாள் பெரிய ஒளிப்பிழம்பாக மாறினார்.

அந்த ஒளிப்பிழம்பின் பெயர் தீபப் பிரகா-சர். இவர் ஒளி வடிவில் இருந்து பிரம்மாவின் யாகத்தைக் காக்க, சிவலிங்கத்தை நிறுவி முழுமுதற் கடவுளான ஈசனை வழிபட்டார்.

அந்த லிங்கத்தின் பெயர் விளக்கொளி நாதர். தீயேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார். பெருமாளையும், சிவ-பிரானையும் இவ்வாறே வைஷ்ணவர்கள் கார்த்திகையில் வழிபடுகின்றனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதி சத்வர்!

போதிசத்வர் காசியில் அவதரித்து, பெரும் யோகியாக மக்களுக்கு உபதேசம் செய்து வந்தார். அவர் வசித்த நகருக்கு அருகே உள்ள கிராமம் ஒன்றில் ஒரு மனிதன் பிச்சை எடுத்து வாழ்ந்து வந்தான்.

ஒருநாள் வழக்கம்போல் பிச்சை எடுத்துவிட்டு தனது வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தான். அவனது வீடு வெகு தூரத்தில் இருந்தது. வழியில் பசி எடுக்கவே ஒரு இடத்தில் அமர்ந்து, தனது பையை அவிழ்த்து அதிலிருந்த உணவில் கொஞ்சத்தை எடுத்து உண்டான். பசியாறியதும் அருகிலிருந்த ஆற்றுக்குச் சென்று தண்ணீரையும் குடித்துவிட்டு வந்து உணவுப் பையை மூடிக் கட்டியெடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

அப்போது ஒரு குரல் அசரீரியாக கேட்டது.

**"நண்பா, நீ இன்று வீட்டிற்குப் போனால் உன் மனைவி இறந்துவிடுவாள். போகாவிட்டால் நீ இறந்து விடுவாய்!"** என்று அந்தக் குரல் எச்சரித்தது. இதைக் கேட்டு அவன் அதிர்ச்சியடைந்தான். சுற்றும் முற்றும் பார்த்தால் ஒருவரும் இல்லை. எனவே இது ஒரு தேவதையின் குரலாக இருக்கவேண்டுமென புரிந்தான்.

தனக்கு நன்மை செய்யும் அறிவிப்பாகவே உணர்ந்தவன் செய்வதறியாது திகைத்தான். வீட்டிற்குப் போனால் மனைவி இறப்பாள். போகாவிட்டால் தனது உயிர் போகும். இதனால் சங்கடமான நிலையில் நின்றபோது பக்கத்து ஊரில் போதி சத்வர் உபதேசம் புரிந்து வருவது நினைவுக்கு வந்தது. உடனே அவரிடம் சென்றான்.

அவனைக் கண்டதும் போதி சத்வருக்கு பெரிதும் பரிதாபம் ஏற்பட்டது.


''ஏனப்பா இந்தளவுக்கு வாடியிருக்கிறாய்! .. இங்கு வந்து அமர்ந்து நிதானமாக் கூறு. " என்று அன்போடு கூறினார்.



அவனும் அன்று நடந்த அனுபவத்தை ஆரம்பத்திலிருந்து சொன்னான். வழியில் தங்கி, உணவுண்டு, ஆற்றில் நீரருந்திவிட்டுப் புறப்பட்ட சம்பவத்தை அவன் விவரித்த கட்டத்தில் கூர்மையாக செவிமடுத்தார் யோகி.

தன்னையும், தன் மனைவியையும் இந்த ஆபத்திலிருந்து எப்படியாவது காப்பாற்றுமாறு கண்ணீர் விட்டான் அந்த ஏழை. சிறிது நேரம் கண்மூடி சிந்தித்த போதி சத்வர் சில விநாடியிலேயே புன்னகையோடு கண்திறந்து கூறினார்,

'' நீ நினைத்தது போல அந்த எச்சரிக்கை ஒரு தேவதையின் குரல்தான். எனது ஊகப்படி உணவை நீ உண்டுவிட்டு பையை கட்டாமல் தண்ணீர் குடிக்க ஆற்றுக்குச் சென்றிருந்த வேளை ஒரு பாம்பு அந்தப் பைக்குள் நுழைந்திருக்க வேண்டும். திரும்பி வந்ததும் பாம்புடன் சேர்த்து பையை கட்டி எடுத்துக்கொண்டாய். இதனை அங்கே ஒரு தேவதை அவதானித்திருக்க வேண்டும். வீட்டிற்குச் செல்லாமல், வழியில் மீண்டும் பசித்தால் பையை அவிழ்க்கும்போது நீ பாம்பால் இறப்பாய். வீட்டிற்குப் போய் பையை மனைவியிடம் கொடுத்தபின் அவள் அதனை அவிழ்க்கும்போது அவள் இறப்பாள். எதற்கும் பையை அவிழ்த்து கவனமாகப் பார் .." என்றார். அந்த ஏழையும் அதனை அவிழ்த்தபோது உள்ளே பாம்பு இருக்கவே பிடித்து அப்பால் எறிந்தான். போதி சத்வரை வீழ்ந்து வணங்கினான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆனந்தமான மாதம் இந்த ஐப்பசி..

இதில் வருகின்ற பௌர்ணமி அஸ்வினி நட்சத்திரத்தோடு கூடி வருவதால், இந்த மாதம் ஐப்பசி என பெயர் பெற்றது. ஐப்பசி என்ற தமிழ்ப் பெயர் அஸ்வினியை குறிப்பதாலும் இது பொருந்துகிறது

அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் கார்த்திகையை முதற்கொண்டு நட்சத்திரத்தை கணக்கிடுவது வழக்கம். தற்போதைய காலத்தில் அஸ்வினி நட்சத்திரத்தையே முதலாவதாக கொண்டு நட்சத்திரத்தைக் கணக்கிடுகிறார்கள். இந்த மாதமானது பெயரளவில் சிறந்திருப்பதற்கு காரணம், முதலாவது நட்சத்திரத்துடன் இம்மாதத்தின் பூரணை சேர்வதாகும்.

**நல்ல நாட்கள்!**

**வளர்பிறையிலும்,**

**தேய்பிறையிலும் ..**

பூர்வம், அபரம் என்னும் வளர்பிறை, தேய்பிறை நாட்களில் இம்மாதத்தில் எப்படியாக நாம் காரியமாற்றவேண்டுமென பெரியோர்கள் விதித்து வைத்துள்ளனர். தேய்பிறையில் காரியமாற்றுவதைவிட, வளர்பிறையிலே அவைகளைச் செய்வதையே அவர்கள் வற்புறுத்துகின்றனர்.

அவ்வாறே இன்றும் செயல்பட்டு வருகின்றனர். அதே சமயம் இரண்டு காலப்பகுதியிலும் நல்ல நாட்கள் இருக்கவே செய்கின்றன. துவாதசி, சதுர்த்தசி, அமாவாசை ஆகிய நல்ல நாட்கள் தேய்பிறையிலும் பிரதமை, துதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி போன்றவை வளர்பிறையிலும் வருகின்றன.

## ஷஷ்டி விரதம்

பத்ம சூரனை முருகக்கடவுள் சம்ஹாரம் செய்த பூரிப்பை கொண்டாடுவதே கந்த ஷஷ்டி விரதம். முருகன் கோயில்கொண்டு எழுந்தருளும் அத்தனை ஆலயங்களிலும் கந்தஷஷ்டி நிகழ்வு மிகச் சிறப்பாக நடக்கும். ஆறு நாட்கள் இந்த விழாவானது தொடர்ந்து நடக்கும். முருகப்பெருமான் சூரனை அழித்த நாள் இந்த ஐப்பசி மாதத்தில் வருகின்ற வளர்பிறை ஷஷ்டி அன்றுதான் வருகிறது.

இம்மாதத்தில் நிகழும் திருவிழாக்கள் யாவும் வளர்பிறைச் சஷ்டியை கடைசி நாளாகக் கொண்டே நடத்தப்படுகின்றன. ஏனெனில், இந்த நாளில்தான் விழாக்கள் நடத்தப்படவேண்டும் என்று ஸ்கந்தோத்ஸவ விதிப்படலத்திலும், கௌசிகப்பிரச்சன குமாரதந்திரத்திலும் கூறப்பட்டிருக்கிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு நாள் விரதம் ..

முருகப்பெருமானை தொழுது நோற்கும் இந்த விரதம் ஆறு நாட்களுக்கு இடம்பெறும். இந்த ஆறு நாட்களுமே மிகப் புனிதமானவை. ஒவ்வொரு நாளிலும் அதிகாலையிலேயே எழுந்து நீராடி, நித்திய கடன்களை முடித்தபின் பூரண கும்பம் வைத்து நீர் நிரப்பி, மாவிலை வைத்து, தர்ப்பையை பரப்பி அதன் மீது சந்தனம் வைத்து, குங்கும அட்சதை இட்டு, முருகனை அதில் ஆவாஹனம் செய்து மலர்தூவி, தீப தூபம் காட்டி, அர்ச்சித்து வழிபடவேண்டும். பகலில் உறக்கம் கொள்ளல் ஆகாது. இரவிலும் விழித்திருக்கவேண்டும்.

நாளாந்தம் ஆறு காலத்திலும் பூஜை செய்ய வேண்டும். கந்தனின் சரிதத்தை கேட்டும், வாசித்தும் மனமொன்ற வேண்டும். முருகனை பாராயணம் செய்யவேண்டும். தியானத்தில் முருகனோடு லயித்து பக்தி நிலையில் இருக்கவேண்டும். இப்படி ஆறு நாட்களையும் நிறைவேற்றிவிட்டு, ஏழாம் நாளில் காலையில் பாரணை செய்யவேண்டும். இதையே தொடர்ந்து மாதந்தோறும் சுக்கில பட்ஷ சதுர்த்தியில் விரதம் இருந்து வழிபட்டு வர எண்ணிய காரியம் தடை இல்லாமல் நிறைவேறும். எண்ணற்ற நலன் வந்துசேரும் ..



## சஷ்டி விரதத்தால் முருகன் தந்த வெகுமதி! ..

சக்கரவர்த்தி முசுகுந்தன் வசிஷ்ட முனிவரின் உபதேசத்தை ஏற்று சஷ்டி விரதத்தை நீண்ட காலம் நோற்று வந்தான். அவனுக்கு முருகப் பெருமான் மயில்மீது அமர்ந்து காட்சி கொடுத்தார். கூடவே வீரவாகு தேவர், இலக்கத்தெண்மர் முதலியோரும் உடனிருந்தனர். இதனால் மகிழ்வடைந்து வணங்கி விழுந்த முசுகுந்தனிடம்,

''உனக்கு வேண்டும் நன்மைகள் யாது?'' எனக் கேட்டார் குமரன். முசுகுந்தனும்,

''நிலவுலகம் முழுவதையும் ஆளும்வண்ணம் வீரவாகு தேவர் உள்ளிட்ட எல்லோரையும் சேனையாக தந்தருள வேண்டும்.'' என வேண்டினான்.

கந்தக்கடவுளும் மகிழ்ந்து வீரவாகு தேவரை நோக்கி, ''நீவிர் உமது சகல அணிகளுடனும் இந்த மன்னனுக்கு துணைவர்களாக இருக்கக் கடவீர் ..'' என்ற திருவாய் மலர்ந்தருளினார்.

ஆயினும் பெருமானை விட்டு விலகமறுத்து வீரவாகு தேவர் உள்ளிட்டோர்கள் இந்த கட்டளையை மறுத்தார்கள். இதனால் ஆறுமுகப்பெருமான் அவர்களை நோக்கி,

''நீங்கள் எனது உரையை மறுத்தீர்களாதலால், மானிடர் யாக்கையை எடுத்து முசுகுந்தனின் படைகளாக பல காலம் இருந்துவிட்டு மீண்டும் வந்துசேரக கடவீர்களாக ..'' என்று கட்டளையிட்டுவிட்டு தமது பூதப்படைகளோடு மறைந்தருளினார்.

இதனால் முசுகுந்த சக்கரவர்த்தியும் பல சாதனைகளோடு கருவூர் என்னும் நகரத்தில் அரசு புரிந்தான். பல மாடமாளிகைகளை உருவாக்கி அதில் வீரவாகு தேவர் உள்ளிட்டோரை அமர்த்தி வளம் மிகுந்த நாடுகளையும், படைகளையும் கொடுத்து தனது படைத் தலைவர்களாக நியமித்தான். எல்லோருக்கும் திருமணமும் முடித்துவைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டிலும், நூல்களிலும் இனிக்கின்ற முருகன்!..

ஒரு புலவரிடம் குடம், சட்டி முதலியவற்றை கொடுத்து, அவற்றை வைத்து ஒரு பாடல் பாடச் சொன்னார்களாம். அவரோ முருக பக்தர் --

".. குக்குடத்தைப் பிடித்தவன் சட்டியை நோக்கக்குறைவில்லையே .." என்று முடியும் செய்யுளைப் பாடினாராம். குக்குடம் என்பது கோழி. கோழிக்கொடியைப் பிடித்து முருகனின் சஷ்டியை அனுஷ்டித்தால், ஒரு குறையும் வராது என்பது இதன் பொருள்.

"குமார சஷ்டி" என்ற பெயரில் கேரளாவில் நோற்கப்படும் இந்த விரதம் அங்கே மிகவும் பிரபலம் கொண்டதாகும்

"திருக்குற்றாலக் குறவஞ்சி" என்னும் நூலில் கந்த சஷ்டி விரதத்தைப் பற்றிய அற்புதமான பாடல்கள் இருக்கின்றன. அவை போன்ற நூல்களை தேடி வாசித்து சுவைப்பதைப் போன்ற பக்தி அனுபவமே இருக்க முடியாது.

வள்ளி அம்மையை மணமுடிக்கும் செவ்வேல் அழகனின் சிறப்பும், முதன்முதலாக சண்டைக்குப்போய் ஆறு நாட்கள் யுத்தம் செய்யும் வீரமும், மாமரமாக நின்ற சூரனை ஷஷ்டி திதியிலே கொன்றொழிக்கும் சாதனையும், இதை வேத பிராமணர்களும், சைவர்களும், முனிவர்களும் முறையாக கொண்டாடும் சிறப்பும் இத்தகைய நூல்களில் வாசிக்கும்போது தேனின் சுவைகூட நிகராக முடியாது ..






தீபாவளி என்கிற அதிசிறந்த பண்டிகையின் வாயிலையும் திறந்து வைக்கிறது இந்த ஐப்பசி மாதம். இம் மாதத்தின் அமாவாசைக்கு முன்னே வரும் திரயோதசி, சதுர்த்தசி, அமாவாசை, அடுத்து வரும் கார்த்திகை சுக்கில பிரதமை ஆகிய இந்த நான்கு நாட்களும் தீபாவளி சம்பந்தப்பட்ட நாட்களாகும். தீபாவளி என்ற சொல்லுக்கு தீபங்களின் வரிசை என்று பொருள். உலகெங்குமுள்ள இந்துக்கள் இத்தினத்தை விமரிசையாக கொண்டாடுகிறார்கள். இந்த பண்டிகை மிகப் பழங்காலத்திலிருந்தே இந்துக்களின் வாழ்க்கையோடு கலந்திருக்கின்ற ஒரு நிகழ்ச்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி நடைமுறைகள்..



தீபாவளியை வெளிப்படுத்தும் முக்கிய நான்கு நாட்களை முன்னரே குறிப்பிட்டோம். எனினும், நம் தமிழர் உள்ளிட்ட தென்னாட்டவர்களும், இலங்கையரும் திரயோதசியையும், சதுர்த்தசியையும் பிரதானமாக கொண்டு அதிலே தீபாவளியை கொண்டாடுகிறார்கள்.

இந்த சதுர்த்தசி தினத்தை நரக சதுர்த்தசி எனவும் அழைப்பர். விடிய நான்கு நாழிகையில் சதுர்த்தசி இருக்கும் நாளில் அருணோதய காலத்தில் நரக சதுர்த்தசி ஸ்நானம் விதிக்கப்பட்டுள்ளது. அருணோதய காலத்தில் எழுந்து, தீபம் ஏற்றி வைத்து, அதில் இலக்குமியை தியானிக்கவேண்டும். எண்ணெய், பழம், வெற்றிலை, பாக்கு, தீன்பண்டங்களை இலக்குமி நாராயணருக்கு நிவேதனம் செய்யவேண்டும். இலக்குமியின் அருளை பெறுவதற்காக தாம்பூலம் தரித்து மனையாளின் கையால், அல்லது தாயாரின் கையால் தலையில் எண்ணெய் இட்டுக்கொள்ள வேண்டும்.

**பண்டிகைகளின் பலனை அறிந்து கொண்டாடினால் புண்ணியமும் கிடைக்குமல்லவா! ..**

தலையில் தீபாவளி நன்னாளில் வைக்கப்படுகின்ற எண்ணெயில் இலக்குமி வசிப்பதாகவும், அன்று நீராடும் தண்ணீர் அல்லது வெந்நீரில் கங்கை வாழ்வதாகவும் புராணங்கள் தெரிவிக்கின்றன. **அன்று அருணோதயத்தில் எண்ணெய் தேய்த்து நீராடுவோர் கங்கையில் நீராடிய புண்ணியத்தைப் பெறுவர். அன்று அருணோதய காலத்தில் சந்திரன் உதித்த பின்பு நிற்கின்ற காலம் ஸ்நானத்திற்கு இன்னும் மிகச்சிறந்தது என்பார்கள்.**

இதைத் தொடர்ந்து விடிந்ததும் தீபாவளிப்பண்டிகை ஆரம்பமாகும்.

இதில் ஒரு வருத்தம் என்னவெனில், நம் இலங்கை இந்துக்கள் இதனை ஒரு பண்டிகையாக மட்டுமே பார்த்து கொண்டாட ஆயத்தமாவர். இத்தினத்தில் கிடைக்கின்ற புண்ணியத்தையும், அர்த்தங்களையும் முழுமையாக அவதானிக்க தவறுகின்றனர். இந்தியாவை எடுத்துக்கொள்ளும்போதுகூட அன்றைய தினத்தில் நண்பர்களும், உறவினர்களும் சந்தித்துக் கொள்ளும்போது 'கங்கா ஸ்நானம் ஆயிற்றா? ..' என்பதுதான் முதல் கேள்வியாக இருக்கும். அவ்வளவு முக்கியமானது அந்த நீராடல். ஆனால் நம் நாட்டிலோ 'ஹேப்பி தீபாவளி ..' என்ற வாழ்த்துப்பரிமாறல்கள்தான் முதல் வார்த்தையாக இருக்கும். பண்டிகைகளின் பலன் அறிந்து கொண்டாடும்போது புண்ணியமும் கிடைக்குமல்லவா! ..

'கங்கா ஸ்நானம் ஆயிற்றா? ..'



**'ஹேப்பி தீபாவளி ..'**

தீபாவளி நன்னாளில் பின்பற்றவேண்டிய கடமைகள் மிகப்பழமை வாய்ந்தவை. வேலைக்காரர்களுக்கு வெகுமதிகள் கொடுப்பதும், அறுசுவையுடன் விருந்துண்பதும், விருந்து அளிப்பதும் சாஸ்திரப்படி அவசியம் செய்யவேண்டிய கருமங்களாகும். இரவில் திரயோதசி வரும் நாளில் யமனுடைய திருப்தியை உத்தேசித்து யமதீப தானமும், பகலில் சதுர்த்தி வரும் நாளில் யம தர்ப்பணமும் செய்யவேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி சிறப்புகள்! ..

## நரகாசுரனின் கடைசி விருப்பம்!

ஸ்ரீ கிருஷ்ண பகவான் நரகன் என்ற அசுரனை வதம் செய்து அழித்தார். அப்போது அவனது கடைசி வேண்டுகோளை ஏற்று தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது என்பதுதான் ஐதீகம். வட இந்தியாவில் பல இடங்களில் தீபாவளியன்று நரகாசுரனுடைய பெரிய பொம்மைகளை கொளுத்தி கிருஷ்ண பகவானுடைய வெற்றியை மக்கள் கொண்டாடி மகிழ்வார்கள். குஜராத்தியர், மார்வாரியர் சமூகங்களை சேர்ந்த வணிகர்கள் அமாவாசையன்று மாலையில் சாரதா பூஜை என்று சொல்லிக் கணக்குப்புத்தகங்களை பூஜை செய்வதும் வழக்கமாகும். பழைய கணக்கை முடித்து புதிய கணக்கையும் தொடங்குவார்கள். இது ஒரு சடங்காக பேணப்பட்டு வருகிறது.


## தீபங்களே தெய்வீகம்!



## ஸ்ரீ எழுத்துக்களால் கணக்குப் புத்தகம்! ..

கணக்குப் புத்தகத்தில் ஸ்ரீ என்ற எழுத்தை ஐந்து, அல்லது ஏழு, அல்லது ஒன்பது தடவை முக்கோண வடிவம் வரும்படி எழுதுவர். அதிர்ஸ்டமுள்ளதாக கருதப்படும் பழைய நாணயத்தை வைத்து இலக்குமி பூஜை நடத்துவர். தீபங்களால் வீட்டை அலங்கரிப்பர். அன்றைய இரவுக்கு சுகராத்திரி அல்லது பட்ஷராத்திரி என்றும் பெயருண்டு.





## நமக்குள்ளும் நரகாசுரன்கள்!


மகாபலி சக்கரவர்த்தி முடிசூடிய தினம் என்றும், விக்கிரமாதித்த ராஜா முடிசூடிய தினம் என்றும் இதனை ஒரு சாரார் கொண்டாடுவர். ஸ்ரீ ராமபிரான் இராவணனை தோற்கடித்துவிட்டு அயோத்தி வந்துசேர்ந்தபோது மக்கள் எல்லோரும் நகரை அலங்கரித்து. இரவில் தீபங்கள் ஏற்றி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள் என்பதற்காகவும் தீபாவளி கொண்டாடப்படுகிறது என்றும் நம்பிக்கை கொள்வோர் உண்டு. ஜைனர்களின் முக்கிய தீர்த்தங்கராகிய மகாவீரர் பரிநிர்வாணம் எய்திய நாளையும் இது குறிக்கிறதாம். ஞானசோதிகள் உலகை விட்டு நீங்கும் தருணங்களை ஈடு செய்யும்பொருட்டு பூதசோதிக்ளாகிய தீபங்கள் ஏற்றப்படுகிறது என்பதும் ஒரு ஐதீகம்.

இத்திருநாளிலே எமது அக இருள் ஒழிந்தபோக வேண்டும் என்றும் மன அழுக்கு இல்லாமல் போகவேண்டுமென்றும் நம் முன்னோர்கள் இதனை கொண்டாடினர். நரகாசுரன் கண்ணனால் ஆட்கொள்ளப்பட்டபோது தன்னைப்போல எல்லோரும் கண்ணனின் திருவடிகளை அடையவேண்டும் என்றுதான் விரும்பினான். ஆனால் நம்மவரில் பெரும்பான்மையோர் அன்றைய தினத்தை புலாலும், குடியுமாக கழிப்பதையே விரும்புகின்றனர். இதனால் அசுரர்களாகவும் மாறிவிடுகிறார்கள். அந்த நிலையை மாற்றவேண்டியும் நம் அகங்களில் தீபத்தை ஏற்றவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேதார கௌரி விரத மகிமை!



பார்வதி தேவியுடன் கைலாயத்தில் சிவபெருமான் சபையில் வீற்றிருந்த ஒரு சமயம், பிரிங்கி முனிவர் ஆனந்தமேலீட்டால் நடனம் புரிந்தார். நடராஜ மூர்த்தியான சிவனே ரசிக்கும்படியாக பிரிங்கி முனிவர் ஆடியபோது அனைவருமே வியந்தனர். இந்த ஆனந்தநிலையில் முனிவருக்கு அனுக்கிரகம் புரிய திருவுளம் கொண்டார் ஈசன். இதனால் சிவனருள் பெற்ற பிரிங்கி முனிவர் பார்வதிதேவியை விலக்கிவிட்டு சிவனை மாத்திரம் பிரதட்ஷணம் செய்தார்.

இதைக் கண்டு வெகுண்ட அம்மை ''பிரபோ, இது தகுமோ! நாமிருவரும் ஒருவராயிருக்க இவர் ஏன் என்னை விலக்கினார்?'' என்று கேட்டார்.

பெருமானும் ''தேவி, நீ பிரகிருதி! நான் புருஷன்! நீ உடல்! நான் உயிர் .. உயிருக்கு ஊட்டம் தேடும் முக்தர்கள் உடலைக் கவனியார். ஆதலினால் உன்னை விலக்கினார். '' என்றார்.

இதனால் கோபமுற்று முனிவரின் உடம்பிலுள்ள இரத்த, தசை பகுதிகளை சுருக்கினாள் பார்வதி. ஊட்டம் அற்றுப்போனதால் ஆடச் சக்தியற்றுத் தள்ளாடினார் முனிவர். எனினும் ரிஷி பலத்தால் மூன்றாவது காலைப் பெற்று நடமாடினார். பிரகிருதியை அப்போதும் மதித்தார் இல்லாமல்போகவே, மனம் நொந்த தேவி 21 நாட்கள் கேதாரேஸ்வரனை வேண்டி விரதமிருந்தாள்.

# கௌரி விரதம் .......

கேதார கௌரி விரதமும் இதே காலத்தில் ஆரம்பமாகி சைவ உலகத்தை இன்பத்தில் ஆழ்த்துகிறது.

புரட்டாதி மாதம் சுக்கில பட்ஷ தசமி தொடங்கி, ஐப்பசி மாதம் கிருஷ்ணபட்ஷ தீபாவளி அமாவாசை வரை 21 நாட்கள் பிரதி தினமும் சிவபெருமானுக்கு வில்வத்தினால் அர்ச்சனை செய்து, இருபத்தியொரு இழையிலே ஒரு கயிறு முறுக்கி அதைத் தினமும் ஒரு முடியாக 21 நாள் முடிந்து கடைசி நாளன்று அக் கயிற்றை கையில் அணிந்து விரதத்தை முடிக்கவேண்டும்.

சிவலிங்க பூஜை இதில் முக்கியமானது. ஆனால் எல்லோருடைய வீட்டிலும் சிவலிங்கம் இருக்க வாய்ப்பு குறைவு. எனவே அம்மியையும், குழவியையும் அலங்கரித்து அம்மிமீது குழவியை நிற்கும்படி அமைத்து அதில் கேதாரீஸ்வரரை ஆவாஹனம் செய்யவேண்டும். 21 நாட்கள் இந்த நோன்பை நடத்த முடியாதவர்கள் கேதார கௌரிவிரத தினத்தன்று 21 பழங்கள், 21 பட்சண வகைகள் செய்து நைவேத்தியம் செய்வதுண்டு.

கணவன் மனைவி ஐக்கியத்தை மேம்படுத்துவதற்கு நடத்தப்படும் முக்கிய விரதம் இது.



**கணவன் மனைவி ஒற்றுமையை வலுவாக்கும் விரதம் இது!**

**எப்படி? ..**

மனமிரங்கிய இறைவன் தனது பாதி உடலை தேவிக்குத் தந்தார். அர்த்தநாரீஸ்வரரானார். அப்போதும்கூட பிரிங்கி முனிவர் வண்டு உருவெடுத்து அவர்களின் உடலைத்துளைத்து சுவாமியை மாத்திரம் வலம் வந்து பிரதட்சணம் செய்தார். ஆனால் இம்முறை பார்வதியம்மை கோபிக்கவில்லை. தாயல்லவா அவள்! கருணையுடன் பிரிங்கியை ஆதரித்து புத்திரனாக்கிக்கொண்டாள். இந்த விரதத்தை அனுஷ்டிப்போருக்கு அருளும்படி பதியை வேண்டினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பார்வதிதேவி கௌரி விரதத்தை நோற்றபோது, சித்திராங்கதன் என்ற கந்தர்வன் பணிவிடை செய்தான். பூவுலகத்தோரும் இவ்விரதத்தை நோற்கும் வரத்தை அர்த்தநாரீஸ்வரரிடம் வேண்டிச்சென்றான். உஜ்ஜியினியை ஆண்டுவந்த வச்சிரதந்தன் என்னும் மன்னனுக்கு இதை உபதேசித்தான். பிறகு அது நாடெல்லாம் பரவி யது.

புண்ணியவதி, பாக்கியவதி என்ற இரண்டு வைசிய கன்னியர்கள் இதை தாங்களும் செய்யவேண்டுமென தமது தந்தையிடம் கோரினார்கள். ஆனால் அவரோ ஏழை. தயங்கினார். ஆயினும் விடவில்லை புத்திரிகள். ''நீங்கள் உத்தரவு கொடுங்கள் போதும், தேவி நடத்தி வைப்பாள். '' என்று நம்பிக்கையுடன் விரதத்தை அனுஷ்டித்தார்கள்.

21 முடியுள்ள நோன்புக் கயிறை க்கட்டிக்கொண்டு விரதம் இருந்தனர். கருணாமூர்த்தியான கைலாசநாதன் விரதத்திற்கு வேண்டிய அத்தனை பொருளையும் தந்தருளினார்.

அந்த புண்ணியத்தின் பலனாக உஜ்ஜியினியின் அரசன் புண்ணியவதியை மணந்தான். சோழ தேசத்தரசன் பாக்கியவதியை மணந்தான. இரு நங்கையரும் இன்பம் பொங்கிய இல்லறத்தை நடத்தினர். செல்வமும் கொழித்தது.


## விரதம் நோற்காவிடில் பொன் பொருள் எதற்காக?

பாக்கியவதி ஒரு புத்திரனையும் பெற்றாள். ஆனால் நாளடைவில் செல்வச்செறுக்கு இவளையும் பாதித்தது. கௌரிவிரத பணிகள் ராணியின் புகழுக்கு ஏற்றதல்ல என கருதினாள். எனவே புரோகிதரைக்கொண்டு சில காலம் செய்வித்தாள். பிறகு அதனையும் மறந்தாள்.

இதனால் சிவாபசாரம் உச்சமடையவே அவளையும், புத்திரனையும் ஏதோ காரணத்துக்காக அரசன் காட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டான். அரசபோகமாக வாழ்ந்துவிட்டு காட்டில் மிகவும் கஷ்டப்பட்டாள். தனது சகோதரி யிடம் சென்று ஏதேனும் பொருள் வாங்கி வா என மகனை அனுப்பினாள். சகோதரியும் பொற்குடம் நிறைய பொருள் கொடுத்தனுப்பினாள்.

# கௌரி விரதத்தின் சக்தி!

ஆனால் அவன் வரும் வழியில் கானகத்தில் ஒரு வழிப்பறித்திருடன் அதனைக் கவர்ந்தான். இதைக்கேட்டு வருந்திய பாக்கியவதி மீண்டும் மகனை பொருள் வாங்கி வருமாறு அனுப்பினாள். ஆனால், மறுபடியும் வழியில் ஒரு தேவ புருஷன் தோன்றி, ''விரதம் நோற்காதவர்களுக்கும், தான தருமம் செய்யாதவர்களுக்கும் பொன்பொருள் எதற்காக? '' என்று கூறி அதையும் அபகரித்தான்.



இராஜகுமாரன் அழுதவாறே இதை தாயிடம் சொன்னபோது 'ஐயோ, நான் என்ன செய்வேன்!''. என கதறியவளுக்கு இப்போது ஒரு உண்மை புரிந்தது. விரதத்தை கைவிட்டதால் வந்த வினையே இது என்றுணர்ந்தாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனந்திருந்திய பாக்கியவதி விரதத்தை முன்புபோல கடைப்பிடிக்க உறுதியேற்றாள். இறைவன் அருளால் முன்புபோலவே விரதத்திற்கு வேண்டிய பொருள் கிட்டும் என்ற நம்பிக்கையோடு ஆரம்பித்தாள். அவ்வாறே இறைவன் வசதி செய்து கொடுத்ததுமட்டுமல்லாது, களவு போன பொருள்களுடன் பலமடங்கு தங்கம் சேர்த்து கொண்டுவந்து தந்தான் தேவ புருஷன்.

இதைக்கேட்டு அவளின் சகோதரியும் பேரானந்தம் அடைந்தாள். இராஜகுமாரனுக்கும் வாலிப வயது வந்தது. கைநிறைய இருந்த பொருளைக்கொண்டு சதுரங்க சேனையை தயார்செய்து காஞ்சி மாநகரம் சென்றான். இதை அறிந்த அவனது தந்தை ராஜோபசாரத்துடன் அவர்களை வரவேற்றான். முன்புபோலவே மீண்டும் எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து கோதார விரதத்தை செய்து, மென்மேலும் செல்வமும், சந்ததியும் வளர்த்தார்கள். என்னே கௌரி விரதத்தின் மகிமை!





## வெள்ளி விரதம் ..

ஏழு கிழமை நோன்புகளிலே வெள்ளிக்கிழமையானது முருகக்கடவுளுக்குறியதாகும். கிழமைகளிலே நான் வெள்ளிக்கிழமை என்று கண்ணன் கீதையிலே கூறுகிறார். இப்படியான நாளில் விரதம் அனுட்டிப்பவர்கள் நினைத்ததெல்லாம் நடக்கக் காண்பார்கள். இதனை கந்த புராணம்கூட 'எள்ளருஞ் சிறப்பின் மிக்க எழுவகை வாரந் தன்னுள் ..' என்ற பாடலில் தெரிவிக்கின்றது.

எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் விரதம் நோற்க முடியாதவர்கள் மாதந்தோறும் வருகின்ற கடைசி வெள்ளியில் விரதம் இருப்பார்கள். அதுவும் இல்லாதவர்கள் ஐப்பசி மாத வெள்ளிக்கிழமைகளில் இருப்பார்கள். அப்படியும் இயலாதவர்கள் ஐப்பசி மாத கடைசி வெள்ளியில் விரதம் இருப்பர். பகீரதன் என்ற அரசன் வெள்ளிக்கிழமை நோன்பை மேற்கொண்டு சோரன் என்ற அரக்கனை வென்று இழந்திருந்த தனது ராஜ்யத்தை மீண்டும் பெற்றான்.

''வெள்ளிக்கிழமையில் வந்தருள்வாய் ஞான வித்தகியே ..'' என்று அகத்திய மாமுனி புகழ்ந்து வரவேற்பதை ஞான நூல்களிலே காணலாம் ..

ஐப்பசி மாத குரு பூஜைகள் ..

01. திருமூலர்
02. திருநெடுமாறர்
03. இடங்கழியார்
04. சாத்தியர்
05. மெய்கண்ட தேவர்
06. பூசலார்
07. ஐயடிகள் காடவர் கோனார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அன்னாபிஷேகப்பிரியர் சிவபிரான்!...




ஐப்பசி மாத பௌர்ணமியில் சிலாலயங்களில் அன்னாபிஷேகம் நடத்துவது தொன்றுதொட்டு நடந்து வரும் ஒன்று.

இது ஒவ்வொரு வருடமும் இடம்பெறும். பௌர்ணமியில்தான் சந்திரன் தனது பதினாறு கலைகளுடன் பூரணமாக விளங்குகிறான். அன்று அவனது கலை அமிர்தக் கலை என்று அழைக்கப்படும்.

அன்றைய தினத்தில் புத்தரிசியால் சாதம் வடித்து சிவனுக்கு அபிஷேகம் செய்வார்கள். பின் அதனை பக்தர்களுக்கு அளிப்பது பெரும்புண்ணியமாகும். இந்நாளில் சிவனுக்கு சாற்றப்படும் ஒவ்வொரு பருக்கையும் ஒரு சிவலிங்கமே.





அன்று ஆலயங்களுக்குச் சென்று சிவ தரிசனம் பெறும்போது, அங்கிருக்கும் கோடிக்கணக்கான அன்னப் பருக்கைகளுமே சிவ வடிவம் பெற்றிருக்கும். அதனால் அவருக்கு அன்னாபிஷேகம் செய்த சாதத்தை உண்பதால் அற்பதமான பலன் கிடைக்கிறது. குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள் சாப்பிட்டால் நிச்சயமாக பலன் உண்டு என்கிறது ஐதீகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாலயங்களில் அன்னாபிஷேகம் நடைபெறுகின்ற அன்று காலையில் லிங்க மூர்த்திக்கு சிறப்பு அபிஷேகம் நடக்கும். பின்னர் அவரது திருமேனியெங்கும் அன்னம் சாத்தப்படும். தொடர்ந்து இடம்பெறுவது சாய ரட்சை பூஜை. அதைத்தொடர்ந்து இரண்டாம் காலம் வரையிலும் அன்னாபிஷேகராக அருட்காட்சி தருகிறார் எம்பெருமான்.





இரண்டாம் காலப் பூஜை முடிந்ததும் அன்னம் கலைக்கப்படுகிறது. இதில் கவனிக்கவேண்டிய முக்கிய விடயம் யாதெனில், லிங்கத்திருமேனியில் படிந்திருந்த அன்னத்தில் கதிர் இயக்கச் சக்தி ஊடுருவி இருக்கும். எனவே, அளவாக சாப்பிடவேண்டும். அதிகமாக சாப்பிட்டால் அதைத் தாங்கும் சக்தி நமக்கு இல்லாமல் போகலாம்.

லிங்க மூர்த்தியின் மேல்புறம் இருப்பதை விட்டுவிட்டு ஏனைய இடங்களில் சிதறி இருப்பதை எடுத்து தயிர் கலந்து பக்தர்களுக்கு பிரசாதமாய் தருவார்கள். மிகுதி அன்னத்தை திருக்குளத்திலோ, அல்லது கடலிலோ கலந்துவிடுவார்கள்.

நீர்வாழ் ஜந்துக்களுக்கு எம்பெருமானின் பிரசாதம் கிடைக்கவேண்டுமென்பது இதன் தத்துவம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 11. ஹலாசனம்



**செய்யும் முறை :**

முதலில் செய்த சர்வாங்காசனம், விபரீத கரணி ஆசனங்களை செய்யக்கூடியவர்கள் அந்த நிலையில் இருந்து கைகளை பின்னால் நீட்டி நிலத்தில் வைத்துக்கொண்டு கால்களை பின்புறமாக மடக்கிக் கொண்டுவந்து நிலத்தில் முட்டவும். உடலை வளைக்கும்போது கால்கள் வளைக்கப்படக் கூடாது. சுவாசம் சாதாரணமாக ஐந்து நிமிடம் செய்தால் போதும். ஹலாசனம் என்பதன் அர்த்தம் ஹலா என்பது கலப்பை. கலப்பை போட்டு நிலத்தினை உழுதால் நிலம் எப்படி பண்படுகிறதோ, அதேபோல இந்த ஆசனம் செய்தால் உடல் பண்படும்.


**பயன்கள் :-**

இந்த ஆசனம் செய்துவர,வயோதிபத் தன்மை தள்ளிப்போடப்படும்.இளமைத்துடிப்பு மீண்டும் உண்டாவதை உணரலாம். முள்ளம்தண்டு வளைக்கப்படுவதனால் அப்பகுதிக்கு புதிய இரத்தோட்டம் பாய்ச்சப்பட்டு புத்துணர்ச்சி ஏற்படுகிறது. வாதம் சம்பந்தமான வியாதிகள் தீரும். மாலைநேரத்தில் இதனைச் செய்துவர ஆஸ்மா, மற்றும் கப சம்பந்தமான வியாதிகள் நீங்கும். நாரிப்பிடிப்பும் நீங்கும்.

## 12. மத்தியாசனம் அல்லது மச்சாசனம்

**செய்யும் முறை :**

முதலில் பத்மாசனம் போடப் பழகியுள்ளவர்கள் பத்மாசன நிலைக்கு வந்து, பின்நோக்கி சரிந்து படுத்து கழுத்துப் பகுதியை நன்கு பின்நோக்கி வளைத்து தலையை நிமிர்த்தி நிலத்தில் முட்டவேண்டும். கைகள் கால்களை எட்டிப்பிடிக்க வேண்டும். இந்த நிலையில் ஆழமாக மூச்சை இழுத்து சுவாசிக்க வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்கள் :-

ஹலாசனம், விபரீதகரணி, சர்வாங்காசனம் போன்ற ஆசனங்களுக்கு மாற்று ஆசனம் இது. நெஞ்சு விரிக்கப்படுவதால் அதிக அளவு காற்று உள்ளே தேக்கி வைக்கப்படக்கூடியதாக இருக்கிறது. இது ஆஸ்மா நோய் உள்ளவர்களுக்கு ஒரு சிறந்த ஆசனம். மார்புக்கூடு நீங்கும். பிராண சக்தியை அதிகளவு சேர்த்து வைக்க இடம் தருகிறது. கழுத்திலிருந்து கால்கள் வரை எல்லா அவயங்களுக்கும் புத்துணர்வைத் தருகிறது.



## 13. சப்த வஜிராசனம்

செய்யும் முறை :


இதுவும் மத்தியாசனம் போன்ற தன்மையுடைய ஒரு ஆசனம்தான். பத்மாசனம் போடமுடியாதவர்கள் வஜிராசன நிலையில் இருந்து இந்த ஆசனத்தை செய்யலாம்.

பயன்கள் :-

முதலில் தந்த மத்தியாசனம், இந்த ஆசனம் இரண்டுக்கும் ஒரே விதமான பயன்கள்தான் உண்டு. முளங்கால்களில் சிறிது வலி ஏற்படும். நாளடைவில் பழக்கத்திற்கு வர சரியாகி விடும். வயதானவர்கள் ஆரம்பத்தில் கால்களை நீட்டி செய்து பழகி, பின் படிப்படியாக இந்த நிலைக்கு வரலாம்.

நன்றி : அஷ்டாங்க யோகி,
நா. குலசிங்கம் அவர்கள்
( பயிற்சிகள் தொடரந்து வரும் )







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸ்ரீமத்பகவத் கீதை

## -- பாரதியார் உரை --

06

தொகுத்து, தொடராக தருபவர் :
வை. திருச்செல்வம்



இவர்கள் காமிகள், சுவர்க்கத்தை பரமாகக் கொண்டோர். பிறப்புக்கும், தொழிலுக்கும் பயன் வேண்டுவோர். போகத்தையும், ஆட்சியையும் வேண்டுவோர். பலவகையான கிரியைகளைக் காட்டிப் பேசுகிறார்கள். 43

இவர்கள் சொல்லுவதைக் கேட்டு மதிமயங்கி, போகத்திலும், ஆட்சியிலும் பற்றுவோருடைய நிச்சய புத்தி சமாதியில் நிலைபெறாது. 44

மூன்று குணங்களுக்குட்பட்டனவற்றைக் குறித்து வேதங்கள் பேசுகின்றன. அர்ஜுனா, நீ மூன்று குணங்களையுங் கடந்தோனாகுக. இருமைகளற்று, எப்போதும் உண்மையில் நின்று, யோக ஷேமங்களைக் கருதாமல் ஆத்மாவை வசப்படுத்துகிறவனாகுக. 45

எங்கும் நீர் நிரம்பிய இடத்தில் ஒரு சிறு குட்டம் என்ன பொருளுடையது, அன்ன பொருளே ஞானமுடைய பிராமணனுக்கு வேதங்களுமுடையன. 46

தொழில் செய்யத்தான் உனக்கு அதிகாரமுண்டு. அதன் பலன்களில் எப்போதுமே உனக்கதிகாரமில்லை. செய்கையின் பயனைக் கருதாதே. தொழில் செய்யாமலுமிராதே. 47


தனஞ்ஜயா, யோகத்தில் நின்று, பற்றை நீக்கி, வெற்றி தோல்விகளை நிகரெனக்கொண்டு தொழில்களைச் செய்க. நடுநிலையே யோகமெனப்படும். 48

தனஞ்ஜயா, புத்தி யோகத்தைக் காட்டிலும் கர்மம் நெடுந்தொலை தாழ்ந்தது. புத்தியை சரணடைய பயனைக் கருதுவோர் லோபிகள். 49

புத்தி யுடையவன் இங்கு நற்செய்கை, தீச்செய்கை இரண்டையுந் துறக்கிறான். ஆகையால் நீ யோகத்திலே பொருந்திவிடு. யோகம் செயல்களில் திறமையாம். 50

புத்தியுடைய மேதாவிகள் செய்கையில் விளையும் பயனைத் துறந்து, பிறவித் தளை நீங்கி, ஆனந்தப் பதவி அடைகிறார்கள். 51

உனது புத்தி மோகக் குழப்பத்தைக் கடந்து செல்லுமாயின், அப்போது கேட்கப்போவது, கேட்கப்பட்டது என்ற இரண்டிலும் உனக்கு வேதனை ஏற்படாது 52





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது புத்தி கேள்வியிலே கலக்கமுறாததாய் உறுதி கொண்டு, சமாதி நிலையில் அசையாது நிற்குமாயின், அப்போது யோகத்தை அடைவாய் 53

## அர்ஜுனன் சொல்லுகிறான் :-

கேசவா, உறுதிகொண்ட அறிவுடன் சமாதியில் நிற்போன் எவ்வாறு பேசுவான்? ஸ்திர புத்தியுடையவன் என்ன சொல்லுவான்? எப்படியிருப்பான்? எதனையடைவான்? 54

## ஸ்ரீ பகவான் சொல்லுகிறார் :-

பார்த்தா, ஒருவன் தன் மனதில் எழும் விருப்பங்களனைத்தையும் துறந்து தன்னிலே தான் மகிழ்ச்சி பெறுவானாயின், அப்போது ஸ்திர புத்தியுடையவனென்று சொல்லப்படுகிறான் 55

''துன்பங் களிலே மனங்கெடா தவனாய்,
இன்பங் களிலே ஆவலற் றவனாய்,
அச்சமும் சினமும் தவிர்த்தவ னாயின்,
அம்முனி,
மதியிலே யுறுதி வாய்ந்தவனென்ப,'' 56

எவன் நல்லதும் கெட்டதும் வருமிடத்தே எதனிலும் வீழ்ச்சியற்றவனாய், ஆவலுறுவதும் பகைப்பதுமின்றியிருப்பானோ, அவனுடைய அறிவே நிலைகொண்டது. 57

ஆமை தன் அவயங்களை இழுத்துக்கொள்ளுவது போல், எப்புறத்திலும் விஷய பதார்த்தங்களினின்று புலன்களையொருவன் மீட்க வல்லானாயின் அவனறிவே நிலைகொண்டது. 58

தம்மைக் கவராத ஜீவனிடமிருந்து விஷயங்கள் தாமே விலகிக்கொள்ளுகின்றன. எனினும் அவற்றிடமுள்ள சுவையை இவன் மறப்பதில்லை. பரம்பொருளைக் காணபானாயின், அச்சுவையுந் தீர்ந்துவிடும். 59

குந்தியின் மகனே, (தவ) முயற்சியுடைய புருஷனிடத்திலேகூட இந்திரியங்கள் வரம்பு கடந்து செல்லும்போது தம்முடன் மனத்தையும் வலிய வாரிச் செல்லுகின்றன. 60


அவற்றையெல்லாம் நன்றாக அடக்கி, யோகத்தில் அமர்ந்தவனாய், என்னைப் பரமாகக் கொண்டு, புலன்களை வசப்படுத்தி வைத்திருப்பவன் எவனோ அவனுடைய அறிவே நிலைகொண்டது. 61

( தொடர்ந்து வரும், மெய்சிலிர்க்கவைக்கும்! )

## ''தம்மைக் கவராத ஜீவனிடமிருந்து விஷயங்கள் தாமே'' விலகிக்கொள்ளுகின்றன''..









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வங்களின் பயோ டேட்டா ..




**திருநாமம் :**
பிள்ளையார்
( நிரந்தர முதல்வர் என்பது பொருள்)

பிறந்த நாள் :
ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தி.

**பெற்றோர் :**
பரமசிவன், பார்வதி
(மூலப்பொருளின் மூலமானவர்கள்)

**சகோதரர்கள் :**
முருகன், ஐயப்பன்
(இருவரும் அப்பா பிள்ளைகள்.
விநாயார் அம்மாவின் பிள்ளை

**மனைவியர் :**
கிரியா சக்தியான சித்தி, இச்சா சக்தியான புத்தி, ஞான சக்தியான வல்லபை. (இவர்களோடு மகாவிஷ்ணுவின் புதல்வியரான மோதை, பிரமோதை, சுமநசை, சுந்தரி, மனோரமை,மங்கலை, கேசினி, காந்தை, சாருஹாசை, சுமத்யமை, நந்தினி, சாமதை என்னும் பன்னிருவரும் கணபதியின் மனைவியரே!)

**மகன்கள் :**
ஷேமம், லாபம் (சித்திராங்கதன், புத்திராங்கதன் என்ற பெயர்களும் உண்டு)

**மாமன் :**
மகாவிஷ்ணு

இருப்பிடம் :
கரும்புச்சாறால் சூழப்பட்டதும், கயிலாயத்தின் ஒரு பகுதியுமான ஆனந்த புவனம். (இது தவிர குளக்கரை, மரத்தடி, முச்சந்தியும்கூட இவருக்கு பிடித்தமான உறைவிடங்களே!)

**வாகனம் :**
கிருத யுகத்தில் சிங்கம், திரேதா யுகத்தில் மயில்,
துவாபர யுகத்தில் மூஞ்சூறு, கலியுகத்தில் குதிரை.

பிடித்த கனி :
மாம்பழம் (அன்னையும், பிதாவும் உலகிற்கு சமமானவர்கள் என்பதை உணர்த்திப் பெற்றது)

**பிடித்த பலகாரம் :**
கொழுக்கட்டை

**ஒடித்தது :**
தந்தம் (பாரதத்தை எழுதவும், கஜமுகனை அழிக்கவும்)

**கொடுத்தது :**
காவிரி (விவசாயிகளுக்காக அன்றே விநாயகரால் திறந்துவிடப்பட்ட ஆறு.

**அருளியது :**
ஔவைக்கு, அகத்தியருக்கு, அடியார்க்கு, பக்தர்களுக்கு.

**அழித்தது :**
ஆணவம், கன்மம், மாயை நிறைந்த அசுரர்களை.

**அவதார நோக்கம் :**
தன்னை நினைத்து தொடங்கும் செயல்களில் குறுக்கிடும் தடைகளை தகர்த்து, எண்ணம் ஈடேற அருளுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை தீபவிழா!



63 நாயன்மார்களுள் ஒருவர் கணம்புல்லர் நாயனார். இவர் கார்த்திகை தீபம் ஏற்றிய நிகழ்ச்சியை சேக்கிழார் பெரிய புராணத்தில் இப்படி குறிப்பிட்டுள்ளார்.

கணம்புல் என்ற ஒரு வகை புல்லை விற்று அந்தப் பணத்தில் சிவபெருமானுக்கு தீபம் ஏற்றி வந்தார் இந்த நாயனார். அதனால் 'கணம்புல்லர்' என்றும் அழைக்கப்பட்டார்.

ஒருநாள் அந்த புல் விலைபோக-ாததால் தீபம் ஏற்ற பணமில்லாத நிலையால் வேதனையுற்றார். எனினும், தயங்காமல் தனது முடியையே கார்த்திகை விளக்காக எரித்தார்.

கணம்புல்லரின் தூய பக்தியை கண்டு மகிழ்ந்த இறைவன் உமாதேவி யுடன் அவருக்கு காட்சி தந்து அருள் பாலித்தார்

விளக்கீடு எனும் கார்த்திகை தீப விழா இந்துக்களிடையே ஆதிக-ாலம் முதற்கொண்டே அனுட்டிக்கப்பட்டு வருகின்றது.

இதில் உள்ள முக்கிய மரபு எதுவெ-னில் சூரியன், சந்திரன், அக்னி ஆகிய முச்சுடரையும் நம் சமயத்து மக்கள் வழிபடுவதுதான்.

இறைவன் ஜோதி வடிவா-னவன் என்பதை இதன் மூலமாக நாம் காண்கின்றோம்.

விளக்குச் சுடரோ, கற்பூர ஒளியோ தென்பட்டுவிட்டால் நம் கைகள் தாமா-கவே அதனை ஏறெடுத்து கண்களில் ஒற்றிக்கொள்கின்றன. ஆணவ இருள் அகற்றி ஞான ஒளி தருவது ஜோதி வழிபாடு.

தீப ஒளி என்பது இறைவனை நமக்கு புலப்படுத்துகிற ஒரு வழியாகும். அதிலும், ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில் வருகின்ற பௌர்ணமியில், சந்திரன் கிருத்திகை நட்சத்திரத்தில் இருக்கும் நாளானது தீப

ஒளியில் இறைவன் தென்படுவதற்கு மிக உகந்ததாகும். இந்த நாளை-யே கார்த்திகை திருவிழாவாக மக்கள் கொண்டாடுகின்றனர். அன்று சூரியன் மறைவதற்கு சற்று முன்னதாகவே வீடுகளில் உள்ளேயும், வெளியேயும்வரிசையாக அகல் விளக்கேற்றுவார்கள்.

அக்கம் பக்கத்தில் உள்ளோரை அழைத்து மஞ்சள், குங்குமம், தாம்பூலம் கொடுக்கும் வழக்கமும் இருக்கிறது. நம் நாட்டில் இந்திய வம்சாவழியினரிடையே இது சிறப்பாக பேணப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. சிறுவர்கள் பட்டாசு வெடித்து மகிழ்வர்.

கார்த்திகை தீப விழாவுக்கு முதல்நாள் பரணி தீபமும், பிந்திய நாள் குப்பைக் கார்த்திகையும் அனுட்டிக்கப்படும். இம்மூன்று நாட்களிலுமே விளக்கேற்றி வழிபாடு செய்யப்படும். ஆலயங்களிலும் கார்த்திகை தீப வழிபாடு வெகு விமர-ிசையாக நடைபெறும். தென்னிந்தியாவில் திருவண்ணாமலை சிகரத்தில் ஏற்றப்படும் கார்த்திகை தீபம் உலக அளவில் பிரசித்தம் பெற்றதாகும். பஞ்சபூதத் தலங்களுள் இது அக்கினித் தலமாகும்.

சுக்கிராச்சாரியார் இழந்த தனது ஒருகண் பார்வையை தவமிருந்து பெற்றது இத்தலத்தில்தான். ஞானமும், முக்தியும் தரவல்லது கார்த்திகை தீப தரிசனம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்களின் வாழ்வில்
ஒளியூட்டும் நெறிகள் ..

# தர்ம சாஸ்திரம் 02

குழந்தை பிறந்த 3வது வயதில் அல்லது 5வது வயதில் 9 நிமிடம் சுத்தியுள்ள லக்கினத்தில், ஒரு நல்ல தினத்தில் குழந்தைக்கு சௌளம் செய்யவேண்டும். குல தெய்வ கோயில-ில் அல்லது, பிரார்த்தனை செய்த ஆலயத்தில் இதனைச் செய்வது சிறப்பு. இதனால் பீடை விலகுகிறது.

சதுர்த்தியில் மயிர் கழித்தால் தாயாருக்கும், சதுர்த்தசியில் சகோதரிக்கும், சஷ்டி சகோதரனுக்கும், பௌர்ணமி பிதாவுக்கும் பீடை உண்டாக்கும். நவமியன்று மயிர் கழித்தால் தன தான்ய சம்பத்து நாசமடையும். ஞாயிறு அல்லது, வியாழக்கிழமையானால் மேற்படி தோஷம் இல்லை.

பிரேதத்தின் முன் போகுதல், நகத்தை வெட்டுதல், மலை ஏறுதல், சமுத்திரத்தில் குளித்தல், வீடு கட்டுதல், தூரதேச யாத்திரை செய்தல், வீட்டில் விவாகம் செய்தல், சிரார்த்த வீட்டில் புசித்தல் ஆகிய இந்த எட்டுக் காரியங்களையும் கர்ப்பிணியுடன் இருக்கும் கணவன் நீக்க வேண்டும். அதே சமயம் கணவன் கர்ப்பிணியாக இருக்கும் மனைவியை எவ்விதத்திலும் கஷ்டப்படுத்தவோ, அசிங்கமான வார்த்தை கூறவோ கூடாது.

எல்லா தினங்களும் குணதோஷம் கலந்துதான் இருக்கும். தோஷமில்லாத நாட்கள் தேவாதி தேவர்களுக்கும் கிடையாது. சொற்ப தோஷம் இருந்தாலும் அதிகமான குணபாகமுள்ள நாட்களில் சுப காரியங்கள் செய்யலாம். உத்தம சோதிடர்களின் வார்த்தையிலும், வாக்கிலும் சரஸ்வதி தேவியும், நவக்கிரகங்களும் வாசம் செய்வதால் அவர்கள் வைக்கும் முகூர்த்தம் சிறப்புடையதாகும்.

குழந்தைக்கு 5 வயது ஆனவுடன் உத்ராயணத்தில் மாசி மாதம் தவிர மற்ற ஐந்து மாதங்களில் சுக்ல பட்சத்தில் கணபதி, சரஸ்வதி பூஜை செய்த பின்பு அஷ்டம சுத்தியுள்ள லக்னத்தில் நல்ல சுப முகூர்த்தத்தில் குழந்தைக்கு வித்யாரம்பம் செய்யவேண்டும். பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் தினத்தில் தாம்பூலம், பழம், தட்சணையுடன் ஆசிரியரை அணுகி நமஸ்கரித்து, ஆசி பெறுவது முக்கியம்.



குழந்தைக்கு மேஷ லக்னத்தில் அட்சராப்பியாசம் ஆரம்பித்தால் மூடனாவான். ரிஷபமானால் வித்தை அதிகமுண்டாகும். மிதுனமானால் தேவ சாஸ்திர பண்டிதனாவான். கடகமானால் பல பாஷை பேசும் வித்தகனாவான். சிம்மமானால் சிற்ப சாஸ்திரனாவான். கன்னியானால் தாய்மொழியில் பிர-பலமாவான். துலாமானால் வியா-பாரியாவான்.

விருச்சிகமானால் சஞ்சாரியாவான். தனுசுவானால் எதிலும் பூரணத்துவம் (ஸ்திர குணம்) இருக்காது. மகரமா-னால் சங்கீத ஞானமுடையவன-ாவான். கும்பமானால் அறிவிருந்தும் பிரகாசமின்றியிருப்பான். மீனமானால் சகல சாஸ்திரங்களை அறிவதோடு, கடல் கடந்து சென்று புகழடைவான்.

எனவே, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அட்சராப்பியாசம் ஆரம்பிக்கும்போது, மேற்படி லக்ன யோகத்தை கவனித்து செய்யவேண்டும். விஜய தசமியன்று சுப லக்னத்தை தேர்ந்தெடுத்து வித்யாரம்பம் செய்வது மி-கமிக சிறப்பு ஆகும்.


ஆயுளை விரும்புகிறவன் கிழக்கு முகமாக உட்கார்ந்து கொண்டும், கீர்த்தியை விரும்புகிறவன் தெற்கு முகமாக உட்கார்ந்து கொண்டும், சம்பத்தை விரும்புகிறவன் மேற்கு முகமாக உட்கார்ந்து கொண்டும், சத்தியத்தை விரும்புகிறவன் வடக்கு முகமாக உட்கார்ந்து கொண்டும் சாப்பிட வேண்டும். சாப்பிடும்போது அதிகமாக பேசுவதை தவிர்க்க வேண்டும்.

நாம் தினசரி சாப்பிடுகின்ற அன்னமானது விஷ்ணு சொருபமாகையால், அதை குறை சொல்லாமல் புகழ்ந்துகொண்டே சாப்பிட வேண்டும். சில வீடுகளில் சாப்பிடும் போதுதான் விவகாரம் பேசுவர். இதனால் அன்ன, வஸ்திர பஞ்சம் அங்கே ஏற்பட இடமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் தினத்தில் தாம்பூலம், பழம், தட்சணையுடன் ஆசிரியரை அணுகி நமஸ்கரித்து, ஆசி பெறுவது முக்கியம்.



உணவை பூசித்து உண்டால் தைரியமும், பலமும் ஏற்படுகிறது. நிந்தித்தால் இவ்விரண்டும் அழிகிறது. எச்சில் பட்ட உணவை ஒருவருக்கும் கொடுக்கக்கூடாது. உண்ணும்போது பாதியில் எழுந்தால் பின் உண்ணலாகாது. வயிற்றை அரைப்பங்கு உணவாலும், கால்பங்கு ஜலத்தாலும் நிரப்பி, மீதி கால் பங்கை காற்று உலவுவதற்கு வழி வகுக்க வேண்டும். ஐம்பது வயதிற்குமேல் இரவில் பால், பழம் மட்டுமே சாப்பிட வேண்டும். இதனால் ஆயுள் விருத்தியடையும்.

அதிகமாக உண்டால் நோய், ஆயுள் குறைவு ஏற்படுவதோடு செலவு விரயமும் ஏற்டுகிறது. அதனால் அளவோடு மேற்குறிப்பிட்டபடி உண்ணவேண்டும். தரமத்தையும் ஆஸ்திகத்தையும் விரும்புகிறவர்கள் சூடு, நுரை இல்லாத ஜலத்தினால் கிழக்கு. அல்லது வடக்கு முகமாக இருந்து ஆசமனம் செய்யவேண்டும். கிழக்கு அல்லது. வடக்கு முகமாக பார்த்து குளிக்கவேண்டும். ஆடிப்பெருக்கன்று உணவை எடுத்து பகல் 24 நாழிகைக்கு மேல் கொண்டுபோய் ஓடுகிற ஜலத்தில் அல்லது, தடாகத்தில் உள்ள மீனுக்குப் போடுவதால் கிடைக்கும் புண்ணியம் அதிகம்.

பெண்களுக்கு விவாகத்தை உபநயனமாகவும், பர்த்தாவுக்கு பணிவிடை செய்வதை வேதமாகவும், வீட்டை காப்பாற்றுவதை தர்மமாகவும் கூறப்பட்டுள்ளது. கணவனே பெண்களுக்கு முதல் தெய்வமாக கூறியிருப்பதால் கணவன் எவ்வளவு மூர்க்கம் உள்ளவனாக இருந்தாலும் அவனே தெய்வம் ஆகிறான்.

காது, தொக்கு, கண், நாக்கு, மூக்கு ஆக ஐந்தும் ஞானேந்திரியமம். ஆசனம், உபஸ்தம், கை, கால் சொல் ஆக இந்த ஐந்தும் கர்மேந்திரியம். தன் இஷ்டப்படி மேற்படி பத்தையும் இயக்குகிற மனம் பதினொன்றாவது இந்திரியம். அதை ஜெயித்தால் எல்லா இந்திரியங்களையும் ஜெயிக்கலாம். மனம் நல்ல வழியில் செல்ல இந்த இந்திரியங்கள் ஒருவனுக்கு உதவுகின்றன.

(இன்னும் இருக்கிறது)

நன்றி: "தர்ம சாஸ்திரம்" நூல்



கர்ப்பிணி மனைவியுடன் இருக்கும் கணவன் எப்படி இருக்க வேண்டும்?



தோஷமில்லாத நாட்கள் தேவாதி தேவர்களுக்கும் கிடையாது ..



உத்தம சோதிடர்களின் வார்த்தையில் சரஸ்வதி தேவியுடன், நவக்கிரகங்களும் வாசம் செய்கின்றன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வங்களின் பயோ டேட்டா ..

**திருநாமம் :**
துர்க்கை
(துர்க்கமன் என்ற அசுரனை அழித்ததால் துர்க்கை என்று பெயர் வந்தது. துர்க்கை என்றால் துன்பத்தை நீக்குபவள் என்று பொருள்.

**பிறந்தது :**
புரட்டாதி மாதம். கிருஷண பட்ஷ சதுர்த்தி.

**கணவர் :**
சிவபெருமான்.
( தனது நான்கு விதமான சக்திகளில் ஒன்றையே துர்க்கையாக உருவெடுக்கச் செய்தவர். )

**பிள்ளைகள் :**
உலக உயிர்கள் அனைத்துக்கும் இவளே தாய் என்பதால், நாமும்கூட அவளின் பிள்ளைகளே!

**சகோதரன் :**
மஹாவிஷ்ணு

**வடிவங்கள் :**
வனதுர்க்கா, சூலினிதுர்க்கா, ஜாதவேதோ துர்க்கா, சாந்தி துர்க்கா, சபரீ துர்க்கா, ஜ்வல துர்க்கா,லவண துர்க்கா, தீப துர்க்கா, ஆசுரி துர்க்கா என நவ வடிவினளாவாள்.

**பிடித்த காலம் :**
ராகு காலம்.
( ராகு கிரகத்தின் அதிதேவதை இவளே! )

**பிடித்த கிழமை :**
செவ்வாய்.
( மங்களகரமானவராகிய செவ்வாய் வழிபட்டதால்தான் மங்கள சண்டீ என அழைக்கப்படுகிறாள்! )

**பிடித்த கனி :**
எலுமிச்சை.
( மாலையாகவும் சாத்தலாம். விளக்காகவும் ஏற்றலாம். )




கலகல ஆன்மீகப் பக்கம்

**அருளியது :**
அகத்தியருக்கு.
( உலகம் சமநிலை பெற தென்திசை சென்ற அகத்தியரின் வழியை மறைத்த விந்திய மலையின் செருக்கை அடக்கினாள். அப்போது வனத்தில் அகத்தியர் பூஜித்ததால் வன துர்க்கை ஆனாள். )

**வென்றது :**
மஹிஷனை.
( மஹிஷனை வெல்வதற்காக தேவர்கள் தங்கள் சக்திகளை அன்னைக்கு அளித்துவிட்டு, பொம்மைகள் போல நின்றார்களாம். அதனால் வந்ததே பொம்மைகள் கொலு.)

**அவதார நோக்கம் :**
பக்தர்களின் பயத்தை அழித்து, ஜெயத்தை வழங்கி அருள்வது.

பிரபலமான திருத்தலங்கள் :
தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம், மன்னார் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி ஆலயம், கொழும்பு மயூராபதி ஆலயம், மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், வேலணை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் முதலிய பெரும் தலங்கள் இலங்கை முழுவதும் இருக்கின்றன ..

## துர்க்கை அம்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பரசியின் மதியூகம்!!

கண்ணகி தனது கால் சிலம்பில் இருந்தது மாணிக்கப்பரல்கள் என்று வாதாடினாள் அல்லவா!

அப்படியானால் அரசியின் சிலம்பில் முத்துக்கள்தான் இருந்திருக்க வேண்டும் என்பதை நன்கறிந்திருக்கிறாள் என்பது தெரிகிறது. ஏனெனில், முத்துக்கள் அன்றைய நாளில் மாணிக்கத்தை விடவும் அதிக விலையுள்ளதாக இருந்ததால் அரச குடும்பத்தினரே வாங்கி அணிய முடிந்தது.

பண்டைய காலத்தில் பாண்டிய மன்னர்களின் தலை நகரமாக விளங்கியது கொற்கை மாநகரம்.. அங்கே விளைந்த முத்துக்கள் பாண்டியர்களின் செல்வச்செழிப்புக்கு முக்கிய காரணமாக விளங்கியது.

சிலப்பதிகாரத்தில் முத்தைப்பற்றி பல இடங்களில் பேசப்பட்டாலும், கொற்கை முத்தைப்பற்றி குறிப்பிடப்படுகின்ற இடம் ஒன்றுதான்.

மதுரை மாநகரில் மங்கையர்கள் காலை வேளைகளிலேயே செல்வ வளம் படைத்த தமது காதலர்களோடு (கடைகழி மகளிர் தம் காதல் அம் செல்வரோடு -- ஊர்காண் காதை --- வரி, 70 ) வைகை நதியிலே படகோட்டிக் கழித்துவிட்டு, நன்பகலில் அவர்கள் அலங்காரம் செய்துகொள்ளும் போது கொற்கைத்துறையில் விளைந்த முத்துக்களாலான மாலைகளை அணிந்து (கொற்கையம் பெருந்துறை முத்தொடு பூண்டு - 80 ) கொண்டனர் என்று கூறப்படுகிறது..

தமிழ் நாட்டின் கொற்கைத் துறைமுகத்தில் குளித்தெடுத்த முத்துக்கள் உலகத்தின் எல்லா சந்தைகளையும் பார்த்தி ருக்கின்றன.

கொற்கையில் விளைந்த முத்துக்களுக்கு ரோமாபுரியின் செல்வத்தையே, வற்றவைக்கும் அளவுக்கு கிராக்கி இருந்தது

அதன் காரணமாக கொற்கைத் துறைமுகத்தின் முத்தெடுப்பையும், முத்து வாணிபத்தையும் தமது ஏகபோகமாக கொண்டிருந்த பாண்டியர்கள் தங்கள் நாட்டில் விளையும் முத்துக்களை சோழநாட்டிற்குக் கொண்டுசெல்ல அனுமதிக்கவில்லை.



## தேடுங்கள்! வாசியுங்கள்! மகிழுங்கள்!!

இதனால் சோழ நாட்டு வணிகர்கள் கொற்கை முத்துக்களை வாங்கவோ, வாங்கி விற்கவோ முடியவில்லை. இங்கேதான் கற்பரசி கண்ணகியின் மதியூகத்தை வியக்கிறார்கள் காப்பிய ரசிகர்கள்.

மேலை நாட்டவரும் மயங்கும் முத்துக்களை பாண்டிய மன்னனின் மனைவி கோப்பெருந்தேவி தன் காற்சிலம்பில் அணியாமலா இருந்திருப்பாள் என்பது கண்ணகியின் நம்பிக்கை.

பாண்டியன் அவைக்கு வந்த கண்ணகி,

**நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!**
**என் காற்சிலம்பு மணியுடை அரியே! ( 66, 67 )**

என்று கூறியதால், **"கொற்கையில் விளையும் முத்து உனது உடமையாக இருக்கும் செருக்கினால்தானே நீ கண்மூடித்தனமாய் நடந்துகொண்டிருக்கிறாய்"** என்று இடித்துக்கூறும் பாவனையில் அவளது சொற்கள் ஒலிக்கின்றன.

அடுத்ததாக, தான் அவனை இடித்துரைத்ததற்கான காரணத்தையும் "என் காற்பொற் சிலம்பின் உள்ளே உள்ள பரல்கள் மாணிக்கங்கள் தெரியுமா உனக்கு?" என்று கேட்பதுபோல கூறிவிடுகிறாள்.

வாசிப்பு இன்பம் தொடரும் ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரியம் முடிந்தால், நடையைக் கட்டுவதா?



ராமர் யுத்தத்தை முடித்துவிட்டார். இராவணன் தொல்லை இனி இல்லை. சீதாப்பிராட்டியையும் மீட்டாயிற்று. இலங்கையிலிருந்து புறப்படுவதற்காக எல்லோரும் ராமரின் உத்தரவுக்காக ஆவலோடு காத்துக்கொண்டிருந்தனர். அயோத்தி செல்லவும், அங்கே ராமரின் பட்டாபிஷேகத்தைக் காணவும் வானர வீரர்களுக்கு ஆவலும். அவசரமுமாய் இருந்தது. கானகமும், மலைகளுமே கதியென்று கிடந்த அவர்களுக்கு நாடு நகரங்களையும், மாட மாளிகைகளையும் காண ஆசை இருக்காதா! ..

அனைவரும் வெற்றிக்களிப்பில் அயோத்தி செல்லும் ஏற்பாட்டில் இருக்க, ஸ்ரீராமர் மட்டும் முகத்தில் துன்பரேகை படர அமர்ந்திருந்தார். அருகே நின்ற விபீஷணன், சுக்ரீவன், ஜாம்பவான் முதலியோருக்கும் புரியவில்லை.

தனது வாக்குறுதியை நம்பி, தம்பி பரதன் காத்திருக்கும் கடைசி நிமிடங்கள் இவை. சற்று தாமதித்தாலும் தீக்குளித்து விடுவான். உடனேயே இலங்கையிலிருந்து போய்ச் சேர்வதென்பதும் சாத்தியமில்லை.

பெருமானை வாட்டும் துன்பம் இதுதானென்பது ஏறக்குறைய எல்லோருக்கும் தெரியும்தான். ஆனால் அவர் இன்னொரு விஷயத்தில் துன்பமுறுவதை அறிய ஒருவருக்கும் வாய்ப்பில்லை ..

மௌனம் கலைந்தார் ராமபிரான் --

''ஆஞ்சநேயா,, எனக்கொரு உதவி செய்வாயா? ..

வணங்கி நின்று செவிமடுத்தார் அனுமன். தனது பிரபு கேட்கப்போவதை ஓரளவு ஊகித்திருந்தார். தான் வரும் சேதியை முன்கூட்டியே புறப்பட்டுச்சென்று பரதனுக்கு அறிவித்து, அவனது தீக்குளிப்பை தடுத்து நிறுத்தும்படி கூறப்போகிறார் ஐயன்.

'இதற்கேன் இத்தனை தாமதம் காட்ட வேண்டும்! தயங்க வேண்டும்!!' என்று மயங்கினார் மாருதி.

வான்மார்க்கமாக பறந்து சென்று நொடிப்பொழுதில் பரதனைச் சந்திப்பது பெரிய வேலையா சொல்லின் செல்வருக்கு?

''கட்டளையிடுங்கள் பிரபு! இப்போதே பரதரை சந்திக்க புறப்பட்டுமா..'' என்றார்.

'' ஆமாம் மாருதி, ஆனால் வழியில் உனக்கு இன்னுமொரு வேலையை தருவதற்கே தயங்குகிறேன் .., அதாவது நீ போகும் வழியில் கங்கையை ஒட்டி சிருங்கிபேரம் என்ற ஊர் வரும். அங்கே என் இன்னொரு தம்பி இருக்கிறான். குகனென்று பெயர். அவனும் பரதனைப்போலவே என்வரவை எதிர்பார்த்து உண்ணாமல் உறங்காமல் இருப்பான். நீ அந்த இடத்தில் இறங்கக்கூட வேண்டாம் பறந்தவாறே அவனிடம் 'அண்ணன் ராமன் வந்துகொண்டிருக்கிறான்' என்று சொல்லிவிடு, அது போதும்'' என்றார்.

சொல்லொணா இன்பத்தில் விண்ணில் பாய்ந்து சென்றார் அஞ்சனை மைந்தர்.

**"இந்த நேரத்தில் இது தேவைதானா .."** என்று அவரும் சலிக்கவில்லை.

**"காரியம் முடிந்தது, இனி நடையைக் கட்டவேண்டியதுதான்.."** என்று ராமரும் நினைக்கவில்லை.

இதுதான் நமக்கும், அவங்களுக்கும் உள்ள வித்தியாசமய்யா! ..

**கற்றுத்தருகின்ற கடைசிப்பக்கம்! ..**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நடுநிசியில் சென்றார்..
கொட்டும் மழையில் நனைந்து
நெல்மணிகளை வயலில் வாரிக்
கொணர்ந்தார்.
பதமாக்கி, அரிசியாக்கி,
அமுது சமைத்தார்.
" குழி நிரம்பாத புன்செய்க் குறும்பயிலர்" அறுவகைக் கறியமுதாக்கி
" உணர்வினால் உயர ஒண்ணா ஒருவரை " அமுது செய்விக்க
இளையான்குடிமாற நாயனாரைத் தூண்டியது எது?




" இன்புறு தாரம் தன்னை
யீசனுக்கு அன்பர் என்றே
துன்புறாது .." உதவும்
தொண்டராம்
இயற்பகை நாயனார்
பெருமையை
நம்போன்றோர்க்கு
உணர்த்துவது எது?

" இன்னுயிர் செருக்கக்
கண்டும் எம்பிரான் அன்பர்
என்றே .."
" நத்தா நமர் .."
என்றும் தடுக்க மெய்ப்பொருள்
நாயனாரை உந்தியது எது?




வாசிப்பு இன்பத்தில் திளைப்பீர், ஆன்ம பலத்தில் வாழ்வீர்! ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org